Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்

INTERNET

மூலம் தொடர்புகொள்ள உள்நாடு, வெளி நாடுகளுக்கான சகலவிதமான துரித தபால்/ பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

இல.46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி

T.P -021-222-7310

(சி-1844)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 12 (03.05.2004) திங்கட்கிழமை இதழ்:214

# விடுதலைப் புலிகளின் பங்களிப்புடன் வட - கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க சந்திரிகா விருப்பம்

## நோர்வே தூதுக்குழுவிடம் தெரிவிப்பு



(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் பங்களிப்புடன், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஆர்வமாக இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே தூதுக் குழுவினரிடம் தெரிவித்தார்.**

**நுவரெலியாவிலுள்ள ஜனாதிபதி மாளிகையில், நோர்வே பிரதி வெளி விவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான தூதுக்குழுவினருடன் நடத்திய சந்திப்பின்போதே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு குறிப்பிட்டார்.**

இந்தச் சந்திப்பு குறித்து ஜனாதிபதி சந்திரிகாவின் ஊடகப் பேச்சாளர் ஜனதாஸ பீரிஸ் தகவல் வெளியிடுகையில் -

கால அட்டவணையிட்டு விடுதலைப் புலிகளோடு சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கான வாய்ப்புக்கள் குறித்து நோர்வே அதிகாரிகளோடு ஜனாதிபதி விவாதித்தார்.

புலிகளின் பங்களிப்புடன் வட-கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை மீண்டும் தொடங்க, தான் ஆர்வமாக இருப்பதாகவும் ஜனாதிபதி நோர்வேக் குழுவினரிடம் தெரிவித்தார்.

இன்று விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் கிளிநொச்சியில் சந்திக்க நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் திட்டமிட்டிருக்கிறார். அவர்கள் உடனடியாக கொழும்பு திரும்பி பேச்சுக் குறித்து தகவல் தருவர் என்றும் ஜனதாச பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக் குறித்து ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது -

சமரச முன்னெடுப்புக்குத் தேவை (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதுக்குழுவினர் சந்திரிகாவுடன் சந்திப்பு!

(கொழும்பு)



நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இந்தச் சந்திப்பு நுவரெலியாவில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

அரசாங்கம் - விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்போகும் ஏது நிலைகள் குறித்தும், வடக்கு - கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்தி தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின் போது நோர்வே ஏற்பாட்டாளர்களிடம் ஜனாதிபதி சந்திரிகா விளக்கமளித்தார்.

எனினும் இது தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து எழுத்து மூல உறுதிமொழியை நோர்வே ஏற்பாட்டாளர்கள் பெற்றார்களா என்பது குறித்த தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

இந்தச் சந்திப்பை அடுத்து கொழும்பு திரும்பிய நோர்வே தூதுக் குழுவினர், நேற்றுமாலை நிதி அமைச்சர் சரத் அமுனுகமவைச் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப் பட்டதாக நிதி அமைச்சர் சரத் அமுனுகம (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொலின் பவலுடன் பேச்சு நடத்த கதிர்காமர் அமெரிக்கா செல்கிறார்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்க ராஜாங்க செயலர் கொலின் பவலை சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பு எதிர்வரும் 12 ஆம் திகதி வொஷிங்ரனில் இடம்பெறவுள்ளது.

இந்த விஜயத்தின்போது இரண்டு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் எதிர்வரும் ஜூன் 3 ஆம் திகதி பிரஸல்சில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் மற்றும் வர்த்தக உறவுகள் என்பன தொடர்பாக அவர் அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

ஏற்கனவே கதிர்காமர் இந்தியா மற்றும் சீனாவில் பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னர் கடந்த வியாழக்கிழமை நாடு திரும்பினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (12 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுக்கான படகிலிருந்த ஆசிரியர் காற்றினால் கடலில் தூக்கிவீசப்பட்டார்!

நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவான் நோக்கி, சமுத்திரா தேவி படகில் பயணம் செய்த ஒருவர் கடும காற்றுக்காரணமாக கடலில் தூக்கி வீசப்பட்டு காணாமற்போயுள்ளார்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் 44 பயணிகளுடன் புறப்பட்ட படகு 10 நிமிட நேரத்தில் கடும் காற்றுக்காரணமாக கடற்கொந்தளிப்புக்குள் சிக்கியது. இதன்போது-படகின் அணியப் பகுதியிலிருந்த சங்கானையைச் சொந்த இடமாகவும், தற்போது யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் வசிப்பவருமான இரத்தினம் - ஜெயசீலன் (வயது - 35) என்பவரே கடற்காற்றினால் தூக்கி வீசப்பட்டார்.

### மீட்க எடுத்த முயற்சி தோல்வி

இவர் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியின் பொருளியல் ஆசிரியரும் ஹொக்கி பயிற்றுவிப்பாளரும் ஆவார்.

இவர் படகிலிருந்து தவறி வீழ்ந்ததைக் கண்ட பயணிகள் படகோட்டிக்கு இதனைத் தெரிவித்தனர். படகோட்டி படகினை நிறுத்தி அவரைக் காப்பாற்ற முயற்சி எடுப்பதற்குள் அவர் கடலில் மூழ்கிவிட்டார்.

பின்னர் படகுமூலம் தேடியும் இவரைக் காணாததால் நெடுந்தீவை நோக்கி பயணிகள் படகு திரும்பிச் சென்றது.

இது தொடர்பாக நெடுந்தீவுப் பொலிஸார் படகோட்டி, படகுச் சிப்பந்திகள் மற்றும் இவர்களுடன் கூட வந்த இன்னொரு இளைஞரையும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோரின் சூட்டுக்கு மட்டக்களப்பில் இளைஞர் பலி!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒல்லிக்குளம் என்னுமிடத்தில் நேற்று மாலை 5.30 மணியளவில் இனந்தெரியாத சிலர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு - ஆரையம்பதியை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னையா- ஜீவரத்தினம் (வயது 30) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார். முன்னாள் புளொட் அமைப்பின் உறுப்பினரான இவர், பின்னர் அவ் அமைப்பிலிருந்து விலகி ஆரையம்பதியில் வாழைப்பழக்கடையொன்றை நடத்தி வந்தாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆரையம்பதியிலுள்ள இவரது வீட்டிற்கு நேற்று மாலை வந்த இரண்டு இளஞர்கள் இவரை மோட்டார் சைக்கிளொன்றில் அழைத்துச் சென்றதாகவும், சிறிது நேரத்தின் பின் துப்பாக்கிச் சத்தம் கேட்டதாகவும் இறந்தவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.அஷ்மீர் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று சடலத்தை பார்வையிட்டதுடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு நாள் சிசு அநாதரவாக மீட்பு!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வெலிக்கண்டலில் அநாதரவாக விடப்பட்ட இரண்டு நாள் சிசுவொன்று - பாதிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

அநாதரவாக வீசப்பட்ட இந்தச் சிசு - எறும்புகள் கடித்து தோல், காது, கண் என்பன பாதிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

மருத்துவ சிகிச்சைக்காக இந்தச் சிசு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## அரியாலை விபத்தில் இளைஞர் மரணம்

அரியாலையில் - நெடுங்குளம் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற மினிபஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

அரியாலை நெடுங்குளம் சந்திக்கு அண்மையில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் மேற்படி விபத்து நடைபெற்றது. இந்தச் சம்பவத்தின் போது- முதலியார் கோவிலடி அளவெட்டியைச் சேர்ந்த சிவநேசன் பாலச்சந்திரன் (வயது 28) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நெடுங்குளம் சந்திக்கு அண்மையில் வீதியால் சென்று கொண்டிருந்த மினிபஸ்சும், மோட்டார் சைக்கிளும் மோதியதிலேயே மேற்படி விபத்து இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் காயமுற்ற மேற்படி இளைஞர், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கும்போது அங்கு உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் பத்திரிகை நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர் என்பது குறிப்பிடத்தக்கது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

(சி/2489)


EXPOAIR

Your friend in the skies...

## ரஜினி ஒரு பலூன்

# அதனை ஊதி, ஊதியே உடைக்கப் போகிறார்கள்

### கி. வீரமணி சாடுகிறார்



ரஜினி ஒரு பலூன். அதை ஊதி ஊதியே உடைக்கப் போகிறார்கள் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கூறினார்.

தர்மபுரி பா.ம.க வேட்பாளர் செந்திலை ஆதரித்து வீரமணி பேசியதாவது -

இந்தியாவை காங்கிரஸ் 50 வருடம் ஆண்டுவிட்டதால் பா.ஜ.கவும் ஒரு 10 வருடம் ஆளட்டும் என சிலர் நினைக்கலாம். ஜனநாயகத்தில் மாற்றுக் கட்சி தேவைதான். ஆனால், பாரதீய ஜனதா மாற்றுக் கட்சியல்ல. ஏமாற்றுக் கட்சி.

பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு, கல்வியில் இட ஒதுக்கீடு தரும் மண்டல் கமிஷன் பரிந்துரையை அமுலாக்கியதற்காக வி.பி.சிங்கின் அரசைக் கவிழ்க்க முற்பட்ட ஜாதி வெறியர்கள்தான் பா.ஜ.கவினர்.


1999 ஆம் ஆண்டில் மத்திய அரசை விட்டு வெளியேறிய ஜெயலலிதாவும், இப்போது வெளியேறிய கருணாநிதியும் தங்களை பா.ஜ.க ஏமாற்றி விட்டதாகக் கூறியுள்ளனர். எல்லோரையும் ஏமாற்றுபவர்கள் பா.ஜ.கவினர்.

இங்கே சில பிரகஸ்பதிகள் (ரஜினி) வன்முறை இல்லாத கட்சி என்று சொல்லி பா.ஜ.கவுக்கு ஆதரவு தேடுகிறார்கள். அவர்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. அந்த பலூன் (ரஜினியின் பலம்) மிகவும் பெரியது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது குண்டூசி குத்தி ஒன்றும் இல்லாமல் ஆகப் போகிறது.

சில நேரங்களில் பலூன் வெடிக்க குண்டூசி கூட தேவையில்லை. அதை ஊதி ஊதிப் பெரிதாக்கியே வெடிக்க வைத்துவிடலாம். அப்படித்தான் இங்கே ஒரு பலூன் (ரஜினி) மேலும் மேலும் ஊதப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றார் வீரமணி.

## வைகோ மீதான பொடா வழக்கை தமிழக அரசு வாபஸ் பெறவேண்டும்

### சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு



(சென்னை)

வைகோ மீதான வழக்கை வாபஸ் பெறவேண்டும் என்று தமிழக அரசுக்கு பொடா மறு ஆய்வுக்குழு உத்தரவிட்டது செல்லும் என - சென்னை உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

இதனால் வை.கோ உள்ளிட்ட 9 தி.மு.கவினர் மீதான பொடா வழக்குகளை வாபஸ் பெறவேண்டிய நிலைக்குத் தமிழக அரசு தள்ளப்பட்டுள்ளது.

முன்னதாக பொடா மறு ஆய்வுக்குழுவின் பரிந்துரை மத்திய மாநில அரசுகளை மட்டுமே கட்டுப்படுத்தும் என்றும், இந்த வழக்கு பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றில் விசாரணையில் இருப்பதால் அதை வாபஸ் பெறவேண்டியது இல்லை என்றும் தமிழக அரசு கூறியுள்ளது.

இதனால், பொடா மறு ஆய்வுக் குழுவின் பரிந்துரையை ஏற்கமறுத்த தமிழக அரசு வழக்கை வாபஸ் பெறமுடியாது என்று கூறியது.

இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றில் வைகோ மனுத்தாக்கல் செய்தார். அதில் மறு ஆய்வுக்குழுவின் பரிந்துரையை ஏற்று தன் மீதான வழக்கை வாபஸ்பெறுமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என வைகோ கோரியிருந்தார்.

அதேபோல தமிழக அரசின் சார்பிலும் ஒரு மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அதில் பொடா மறு ஆய்வுக் குழுவின் பரிந்துரையை ரத்துச் செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த இரு மனுக்களையும் விசாரித்த தலைமை நீதிபதி சுபாஷன் ரெட்டி, நீதிபதி சிர்புர்கர் ஆகியோர் அடங்கிய சட்டத்தரணிகள் குழு வைகோவின் கோரிக்கையை ஏற்றது.

பொடா மறு ஆய்வுக்குழுவின் பரிந்துரை மாநில அரசைக் கட்டுப்படுத்தும் என நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் கூறியதுடன், தமிழக அரசின் மனுவைத் தள்ளுபடி செய்தனர்.

## எஸ். எஸ். சந்திரன் பிரசாரத்தில் குழப்பம்

# தி.மு.க கூட்டணியினருக்கு சேலத்தில் அரிவாள் வெட்டு

(சென்னை)

சேலத்தில் நடிகர் எஸ்.எஸ்.சந்திரனின் தேர்தல் பிரசாரத்தில் தகராறு ஏற்பட்டது. இதில் தி.மு.க, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 4 பேர் அரிவாளால் வெட்டப்பட்டனர்.

சேலம் - கன்னங்குறிச்சி சந்தைப்பேட்டையில் அ.தி.மு.கவுக்கு ஆதரவாக எஸ்.எஸ்.சந்திரன் ஜீப்பில் நின்றவாறு பிரச்ாரம் செய்தார்.

அப்போது அவர் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி, தி.மு.க தலைவர் கருணாநிதி உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்களை கடுமையாக விமர்சித்துப் பேசினார். கருணாநிதியை ஒற்றைக்கண் சிவராஜன் என்று கூறினார்.

இதற்கு அப்பகுதியிலுள்ள ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதையடுத்து, இரு தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டது.

இதில் காங்கிரஸ் கட்சியின் கன்னங்குறிச்சி பேரூராட்சி சபை உறுப்பினரான பத்தவக்சலம், தி.மு.க பிரமுகர்கள் குபேந்திரன், ஐயப்பன், முனியப்பன், ஆகியோர் அரிவாளால் வெட்டப்பட்டனர்.

இவர்கள் 4 பேரும் சேலம் அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதில் குபேந்திரன் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

## தமிழ்நாட்டில் உள்ள ஆறு தொகுதிகளில்

# பிரசாரம் செய்யச் செல்வது குறித்து ரசிகர்களுடன் ரஜினி கலந்துரையாடல்

(சென்னை)

நாடாளுமன்ற தேர்தலில் பாரதீய ஜனதா, அ.தி.மு.க கூட்டணிக்கு ரஜினிகாந் ஆதரவு தெரிவித்துள்ளார். பா.ம.க போட்டியிடும் 6 தொகுதிகளிலும் அந்தக் கட்சிக்கு எதிராக ரசிகர்கள் பிரசாரம் செய்வார்கள் என்று ரஜினி வெளிப்படையாகவே அறிவித்துவிட்டார்.

இதைத் தொடர்ந்து பா.ம.க போட்டியிடும் 6 தொகுதிகளிலும் ரஜினி ரசிகர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள். பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த ரசிகர்களும் அந்த தொகுதிகளில் முகாமிட்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

6 தொகுதிகளிலும் ரஜினிகாந் பிரசாரம் செய்யவேண்டும் என்று ரசிகர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

அந்தத் தொகுதிகளில் பிரசாரம் செய்யச் செல்வதா, வேண்டாமா என்பது பற்றி ஆலோசிப்பதற்காக 6 தொகுதி ரசிகர்களுடன் பேசுவதற்கு ரஜினி திட்டமிட்டிருந்தார். ஆனால், திடீரென்று இமயமலைக்கு சென்றதால் ரசிகர்கள் சந்திப்பு ரத்துச்செய்யப்பட்டது.

இப்போது ரசிகர்களை நேரில் சந்திக்க முடிவு செய்துள்ளார். இதற்கு 6 தொகுதிகளில் இருந்தும் 1200 ரசிகர்கள் மற்றும் ரசிகர் மன்ற நிர்வாகிகள் அழைக்கப்பட்டுள்ளார்கள்.



அவர்கள் அனைவரும் பஸ், கார்; மூலமாக இன்று காலை 6 மணிக்கு சென்னை வருகிறார்கள். கோடம்பாக்கத்தில் ரஜினி ராகவேந்திரா மண்டபத்தில் கூட்டம் நடக்கிறது. ரஜினி காலை 10 மணிக்கு ரசிகர்களை சந்தித்து பேசுகிறார். இந்தக் கூட்டத்தில் பா.ம.கவுக்கு எதிராக வகுக்கவேண்டிய தேர்தல் வியூகம் மற்றும் ரசிகர்களின் பாதுகாப்புப் பற்றி பேசப்படுகிறது.

6 தொகுதிகளிலும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும் ரசிகர்களுக்கு அடையாள அட்டை தயாராகி விட்டது. ரஜினியின் படம் மற்றும் கையெழுத்துடன் அது தயார் செய்யப்பட்டுள்ளது. இன்று அடையாள அட்டைகளையும் ரஜினி வழங்குகிறார்.

இந்தக்கூட்டத்தில் 6 தொகுதிகளுக்கும் பிரசாரத்துக்கு செல்வது பற்றியும் ரஜினி விவாதிக்கிறார். கூட்டத்தில் கலந்துகொள்ளும் 1200 ரசிகர்களுக்கும் ராகவேந்திரா மண்டபத்தில் மதிய விருந்து வழங்கப் படுகிறது.

### சோனியா பிரதமராவதை எதிர்க்கமாட்டோம் என்கிறார் ஜோதி பாசு

காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா பிரதமராவதில் எந்தத் தடையுமில்லை. அவர் வெளிநாட்டவர் என்ற பிரச்சினை எடுபடாது. சோனியா பிரதமர் பதவி வகித்தால் அதை நாங்கள் எதிர்க்கமாட்டோம். சோனியா தலைமையில் கூட்டணி அரசு அமைக்கலாம். ஆனால், குறைந்தபட்ச பொது திட்டத்தை அந்த கூட்டணி வகுத்துக்கொள்ள வேண்டும். அது மிகவும் முக்கியமானது. 3 ஆவது அணி ஆட்சியமைக்க வாய்ப்பில்லை.

இவ்வாறு, மேற்கு வங்காள முதல் மந்திரியும், இந்திய கம்யூனிஸ்ட் தலைவருமான ஜோதி பாசு தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளிக்கும்போது தெரிவித்தார்.

## 31ம் நினைவுநாளும் அந்தியேட்டி அழைப்பும்



இத்தாலியில் சாவடைந்த
அமரர் கந்தசாமி சதீஸ்வரன்
(ஈஸ்வரன்)
கொக்குவில் கிழக்கு

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01.07.1976 | 03.04.2004 |

31ம் நினைவுநாளும் அந்தியேட்டி நிகழ்வும் அன்னாரின் இல்லத்தில் 03.05.2005 அன்று நடைபெறவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

நினைவுடன்-

அப்பா (கந்தசாமி), அம்மா (கமலா தேவி), அக்கா - சசிகலா (இத்தாலி), அத்தான் - குகதாசன் (இத்தாலி), அண்ணன் - சசிதரன் (கொழும்பு), அண்ணி - யோகேஸ்வரி (கொழும்பு), பிள்ளைகள் - பிரவீந்திரன், கிருத்திகா

செருக்கப்புலம்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

(சி-2495)


நிறைஞ்சனாஸ் சங்கானை

சிறிகாந், பூமிகா மற்றும் விவேக் நடித்த

ரோஜா கூட்டம்

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)

Do not Disturp

(சி-2386)

நாகம்ஸ் சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேலு நடித்த



அருள்
(றீல்ஸ்)

ஆசனப் பதிவுகளுக்கு - நாகம்ஸ் பாட்டா-சுன்னாகம்
நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின்ற் காடின், முட்டாஸ் கடைச்சந்தி, K.K.S றோட், யாழ்ப்பாணம். (சி-2397)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இளைய தளபதி
விஜய், திரிஷா நடித்த



கில்லி

காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2387)

# புலிகளே தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள்; கதிர்காமர் கூற்றுக்கு சிஹலஉறுமய கண்டனம்

தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என லக்ஷ்மன் கதிர்காமர் ஏற்றுக் கொண்டமை வெட்கம் கெட்ட செயல் என ஜாதிக ஹெல உறுமய கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக் குத் தீர்வு காணும் விடயத்தில் சகல கட்சிகளுடனும் பேசியே தீர்வு காணப்படுமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூறியிருந்ததாக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் திலக் கருணாரட்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என தற்போது லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளமை வெட்கம் கெட்ட செயல்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்த யோசனைகளை நிராகரித்து வந்த லக்ஷ்மன் கதிர்காமர், திடீரென தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளென கூறியுள்ளமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து அரசுக்கான ஆதரவினைத் திரட்டுவதற்கான ஒரு தந்திரமே.

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான முன்னைய நிலைப் பாட்டிலிருந்து ஜே.வி.பி.யும் மாறி விட்டதோ, நாம் சந்தேகிக்கிறோம். வடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்ற லக்ஷ்மன் கதிர்காமரின் இந்தக் கருத்து தொடர்பாக ஜே.வி.பி தனது நிலைப் பாட்டை மிகவிரைவில் வெளியிட வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்த வருட இறுதிக்குள் இன்னொரு பொதுத்தேர்தல்!

## ஐ.தே.க. கூறுகிறது

இலங்கையில் இந்த வருட இறுதிக்குள் இன்னொரு பொதுத் தேர்தல் இடம்பெறுமென பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக்கட்சி மேலும் தெரிவித்ததாவது -

அடுத்த ஆறுமாத காலத்திற் குள் நாட்டில் அடுத்த பொதுத்தேர்த லொன்று இடம்பெற வாய்ப்புள்ளது. இதற்கு முக்கிய காரணம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலை மையிலான அரசாங்கம் சிறுபான்மை யாக இருப்பதேயாகும்.

தற்போது 106 உறுப்பினர்க ளைக் கொண்டுள்ள அரசுக்கு, நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்க ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

அத்துடன், நாட்டின் மிகமுக் கியமான சபாநாயகர் பதவி தெரிவி லேயே அரசாங்கம் தோற்றுவிட்டது. எனவே, தனது பெரும்பான்மையை அரசாங்கம் எவ்வாறு நாடாளு மன்றில் நிரூபிக்கப்போகின்றது?

எனவே - இந்தக் காரணங்க ளால் இந்த வருடம் முடிவடை வதற்கிடையில் நாட்டில் மீளவும் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள தாக ஐக்கிய தேசியக் கட்சி தெரி வித்தது.

இதற்கிடையில், ஐக்கிய தேசியக கட்சியின் பலவீனங்களை அறிந்து, அதற்கான ஆய்வுகளை ஆழமாக அந்தக்கட்சி ஆராயவுள்ளதாகத் தெரியவருகின்றது.

# அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கு ஐந்து வருடகால சிறைத்தண்டனை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் முன்னர் பணிபுரிந்த கணவன் - மனைவியான இரண்டு அமெரிக்கர்கள், திருட்டுத்தனமாக விசா வழங்கிய குற்றத்தின்பேரில் அந்த நாட்டு நீதிமன்றினால் தண்டிக் கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாகக் கொழும்பி லுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளி யிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

இந்த இருவரது குற்றங்கள் தொடர்பாகவும் கடந்த இரண்டு வரு டங்களாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தலைமையலு வலகத்தின் இராஜதந்திர பிரிவி னரால் நடத்தப்பட்ட பலபக்க விசார ணைகளின்போதே இந்த இருவரும் குற்றவாளியென இனங்காணப்பட் டனர்.

ஆர்.ஜோன்சன் அவரது மனை வியான லோங் என்.லீ இருவருமே இவ்வாறு குற்றவாளிகளாக இனங் காணப்பட்டவர்களாவர்.

அமெரிக்காவின் கலிபோர்னிய மாகாணத்திலுள்ள மாவட்ட நீதிமன் றம் ஒன்றில் நடத்தப்பட்ட விசார ணையில் இவர்கள் இருவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

தமது குற்றத்தை இவர்கள் ஒப்புக்கொண்டதனால், ஒவ்வொரு வருக்கும் 5 வருடச் சிறைத்தண்ட னையுடன், 750,000 அமெரிக்க டொலர் அபராதமும் விதித்து, நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

# பிரதி சபாநாயகர் பதவிக்கு முத்து சிவலிங்கத்தின் பெயர் சிபார்சு

## தொழிலாளர் காங்கிரஸ் அறிவிப்பு

(கொழும்பு)


பிரதி சபாநாயகர் தெரிவுக்கு தமது கட்சி சார்ந்த ஒருவரை இலங் கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறி வித்துள்ளது. இது தொடர்பாக இலங் கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் எம்.எஸ்.செல்லச்சாமி கருத்து தெரிவிக்கையில் - பிரதி சபாநாயகரர் பதவிக்குத் தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கத்தைத் தமது கட்சி சிபார்சு செய்யவுள்ளதாகத் தெரி வித்தார்.

பிரதி சபாநாயகராக முத்து சிவலிங்கம் தெரிவு செய்யப்பட்டால் அவர் ஐக்கிய தேசிய முன்ன ணியை பிரதிநிதித்துவப்படுத்துவார் எனவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் எம்.எஸ்.செல்லச்சாமி தெரிவித்தார்.

அத்துடன், முத்து சிவலிங் கத்தைப் பிரதி சபாநாயகராக நிய மிப்பதற்கான ஆதரவினை வழங் குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியையும் தாம் கேட்க வுள்ளதாகவும் அவர் மேலும் தெரி வித்தார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மேதின நிகழ்வுகளில் சில காட்சிகள்



நோர்வேயில் நேற்றுமுன்தினம் புலம்பெயர் மக்கள் நடத்திய மேதின பேரணிகளில் சில காட்சிகள்.






சுவிற்சர்லாந்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட மேதின பேரணிகளில் எடுக்கப்பட்ட படங்கள்.






# ஷேன் பொண்ட் விடயத்தில் கவனத்துடன் இருப்போம்!

## நியூஸிலாந்து கிரிக்கெட் சபை கூறுகிறது



(லண்டன்)

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கு மீண்டும் திரும்பியிருக்கும் ஷேன் பொண்ட் மீண்டும் விளையாடும் விடயத்தில் இனி மிகவும் கவனமுடன், எச்சரிக்கையுடன் இருக்கப்போவதாக நியூஸிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

காயம் காரணமாக நியூஸிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஷேன் பொண்ட் கடந்த ஒரு வருடகாலமாக போட்டிகளில் கலந்துகொள்ளாமல் இருந்துவந்தார். இந்த நிலையில் காயத்தில் இருந்து குணமடைந்துள்ள ஷேன் பொண்ட் மீண்டும் டெஸ்ட் போட்டிகளுக்கு திரும்பியுள்ளார்.

ஆனால், ஷேன் பொண்ட் முழுவதும் தயாராவதற்கு முன்னர் அவசரப்பட்டு மீண்டும் அணியில் இடம்பெறச் செய்யப்போவதில்லை என்று நியூஸிலாந்து அணியின் பயிற்சியாளர் ஜோன் பிரேஸ்வேல் தெரிவித்தார்.

ஷேன் பொண்ட் விடயத்தில் அவசரப்பட்டு கடினமான முடிவை எடுக்கப்போவதில்லை என்று பிரெஸ்வெல் தெரிவித்தார்.

நியூஸிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிலையில் ஷேன் பொண்ட் குறித்து பிரேஸ்வெல் கூறுகையில், "குணமடையும் நிலையில் ஷேன் பொண்ட் இருந்து வருகிறார். முதல் டெஸ்டில் அவர் விளையாடினால், அது மிகப் பெரிய போனஸ் ஆகும்.

ஷேன் பொண்டிற்கும் இது மிகப்பெரிய உற்சாகமளிக்கும் விடயமாகும். தற்போதுதான் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை ஷேன் பொண்ட் நன்கு உணர்ந்திருக்கிறார். இருப்பினும் நாங்கள் அவசரப்படப்போவதில்லை" என்று கூறினார்.

# மரணத்தின் விளிம்பிலிருந்து ரசிகர்கள் என்னை மீட்டனர்!

## மரடோனா பேட்டி



(புவனஸ் அயர்ஸ்)

சாவின் கொடூரபார்வை தன்மீது விழுந்ததாகவும், இந்த இக்கட்டான நிலையில் இருந்து மீள்வதற்கு ரசிகர்கள் மிகவும் உதவியாக இருந்ததாக ஆர்ஜன்ரீனாவைச் சேர்ந்த பிரபல முன்னாள் கால்பந்து வீரர் மரடோனா தெரிவித்தார்.

இருதய கோளாறு காரணமாக மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மரடோனா நேற்று முன்தினம் வீடு திரும்பினார். 12 நாட்கள் தீவிர சிகிச்சைக்குப் பின்னர் மரடோனா வீடு திரும்பினார்.

மாரடோனா குணமடைய வேண்டும் என்பதற்காக அவர் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனை வாசலில் நூற்றுக் கணக்கானோர் இரவு பகலாகக் காத்துக்கிடந்தனர்.

இந்த நிலையில், மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய மரடோனா, முதன்முறையாக நிருபர்களைச் சந்தித்தார். பேட்டியின்போது மிக மெதுவாகவும், தொடர்ச்சியாக பேச முடியாமலும் தவித்தார் மரடோனா.

"நான் ஏறக்குறைய இறந்து விட்டேன்" என்று தடுமாறிய நிலையில் பேட்டியளித்த மரடோனா, இது குறித்துக் கூறுகையில்- "சாவின் மிரட்டலில் நான் தொங்கிக்கொண்டிருந்தேன். சாவின் விளிம்பைத் தொட்டுவிட்டேன். ஆனால், ரசிகர்களின் ஆதரவு என்னை திருப்ப அழைத்து வந்துவிட்டது" என்று கூறினார்.

இன்னும் ஒரு வார காலத்திற்கு பியூனோஸ் ஆயர்சிலேயே தங்கியிருக்க திட்டமிட்டிருப்பதாக கூறிய மரடோனா - அதன் பின்பு கியூபாவிற்கும், இத்தாலிக்கும் செல்ல இருப்பதாகக் கூறினார்.

பேட்டியின்போது, மரடோனா மேலும் கூறுகையில் - "இனிவரும் காலங்களில் யாருக்கும் எந்தவித இடையூறும் கொடுக்காமல் வாழவேண்டும் என்பது எனது விருப்பம்" என்று கூறிய மரடோனா, தனக்காக பிரார்த்தனை செய்த ரசிகர்களுக்கு நன்றி கூறுவதற்காக உலகம் முழுவதற்கும் செல்ல இருப்பதாகவும் விரைவில் ஈராக், ஆப்கானிஸ்தானிற்கும் செல்ல இருப்பதாகவும் கூறினார்.

# அக்தரின் பரிசோதனை அறிக்கை வெளியிட்டதற்கு கண்டனம்!

## மருத்துவமனை மீது கிரிக்கெட் சபை பாய்ச்சல்

(இஸ்லாமாபாத்)

அக்தர் பற்றிய மருத்துவ அறிக்கையை வெளியிட்ட லாகூர் மருத்துவமனையை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடுமையாக சாடியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் நியமிக்கப்பட்ட மருத்துவக்குழு, அக்தர் பற்றிய மருத்துவ அறிக்கையை ஆய்வு செய்யும் முன்னர் அந்த அறிக்கையை வெளியிட்ட மருத்துவமனையை கிரிக்கெட் சபை கடுமையாக குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த மருத்துவமனையை பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டனான இம்ரான்கான் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

அக்தரின் மருத்துவ அறிக்கை வெளியானதற்கு கிரிக்கெட் சபை செய்தித் தொடர்பாளர் சமி-உல்-ஹசன் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

லாகூரில் உள்ள சௌகத்கானும் மருத்துவமனையில் அக்தருக்கு மருத்துவக்குழு பரிசோதனை நடத்தியது. இந்த மருத்துவமனையில் நவீன உபகரணங்கள் இருப்பதால், அக்தருக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டதாக சமி-உல்-ஹசன் தெரிவித்தார்.

இந்த பரிசோதனை அறிக்கையை மருத்துவக்குழு ஆய்வு, செய்யும் முன்னரே அந்த அறிக்கை வெளியிடப்பட்டது வழக்கத்திற்கு மாறானது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் குற்றஞ்சாட்டினார்.

இந்த பரிசோதனை அறிக்கையின் முழு விபரமும் மருத்துவமனையின் அடையாளச் சின்னத்துடன் உள்ளூர் பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டிருந்தது.

ஆனால், மருத்துவ பரிசோதனை அறிக்கை வெளியானதற்கு அக்தரின் சகோதரர் ஷாஹித் தான் காரணம் என்று மருத்துவமனை வட்டாரங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

தன்னுடைய சகோதரர் சொகைப் அக்தர் பாகிஸ்தான் அணியில் முழு ஈடுபாட்டுடன் இருப்பதை உணர்த்தவே பரிசோதனை அறிக்கையை வெளியிட்டதாக அக்தரின் சகோதரர் கூறியதாக உள்ளூர் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# மருத்துவக்குழு அறிக்கையின் பின் எதிர்காலம் குறித்து முடிவு செய்வேன்

## அக்தர் அறிவிப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியமித்த மருத்துவ குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே, தனது அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவு எடுக்கப்போவதாக பாகிஸ்தான் அணியின் அதிவேகப் பந்து வீச்சாளரான சொகைப் அக்தர் தெரிவித்தார்.

இது குறித்து அக்தர் கூறியதாக 'டோன்' என்ற பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது, "பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை வெளியிட்ட பின்பு, பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் எனது அடுத்த நடவடிக்கை குறித்து அறிவிப்பேன்" என்று கூறினார்.

இந்த நிலையில் தன்மீது எந்தக் குற்றச் சாட்டும் இல்லை, தான்ஒரு நிரபராதி என்று மருத்துவக் குழு அறிவிக்கும் அறிக்கை குறித்து நம்பிக்கையுடன் இருப்பதாக அக்தர் தெரிவித்தார்.

ஆனால், அக்தருக்கு காயம் ஏற்பட்டது என்று கூறப்பட்டிருப்பது ஸ்கான் அறிக்கையே என்றும், மருத்துவக் குழுவின் அறிக்கை அல்ல என்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மருத்துவ குழுவின் அறிக்கை நாளை சமர்ப்பிக்கப்படும் என்றும், அதற்கு மறுநாள் அறிக்கை வெளியிடப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்த நிலையில் அக்தர் உட்பட 5 கிரிக்கெட் வீரர்கள் மீதான மருத்துவக் குழு விசாரணை பற்றி கப்டன் இன்ஸமாம், துணை கப்டன் யுகானா ஆகியோர், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹரியார்கானிடம் ஆலோசனை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்துக்கு எதிராக முதல் வெற்றியைப் பெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி!



இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இங்கிலாந்து - மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் இடையேயான 5 ஆவது ஒரு நாள் போட்டி செயிண்ட் லுசிகாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

முதலில் விளையாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 281 ஓட்டங்களை குவித்தது. தொடக்க வீரர் டிரெஸ்கோதிக் அபாராமாக ஆடி 'சதம்' அடித்தார். அவர் 130 ஓட்டங்களையும் பிளின்டொப் 59 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பிரட்ஷா, பிரேவோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ராம்பவுல், கெய்ல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

பின்னர் மேற்கிந்தியத் தீவுகள் அணி விளையாடியது. சர்வானின் அபார ஆட்டத்தால் அந்த அணிக்கு வெற்றி கிடைத்தது. மேற்கிந்தியத் தீவுகள் 48 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 284 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

சர்வான் ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்களையும் ஸ்மித் 44 ஓட்டங்களையும் சந்திரபோல் 40 ஓட்டங்களையும் எடுத்தனர். அன்டர்சன் 2 விக்கெட்டையும் பிளேக்வெல், ஹார், மிசன், பிளின்டொப் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் எடுத்தனர். இந்தத் தொடரில் இப்போது தான் மேற்கிந்தியத்தீவுகள் முதலாவது வெற்றியைப் பெற்று இருக்கிறது.

# விளையாட்டு

# அபுதாபி போட்டியில் விளையாடுவதற்கு இன்சமாம் ஆவலாக இருக்கிறாராம்!



(துபாய்)

அபுதாபியில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த இந்தியாவுக்கு எதிரான காட்சி கிரிக்கெட் போட்டியில் விளையாட ஆவலுடன் இருப்பதாக பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்ஸமாம் தெரிவித்தார்.

அபுதாபியில் வரும் 14 ஆம் திகதி இந்தியா, பாகிஸ்தான் இரு அணிகளுக்கும் இடையே காட்சி கிரிக்கெட் போட்டி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த போட்டியில் விளையாட இந்திய அணிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அபுதாபி போட்டியில் விளையாட ஆவலுடன் இருப்பதாக பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்ஸமாம் அறிவித்துள்ளார். இந்தப் போட்டியில் விளையாட அபுதாபி கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அழைப்பு விடுத்திருப்பதாகவும், பாகிஸ்தான் அணி வீரர்கள் இந்தப் போட்டியை ஆவலுடன் எதிர்நோககி இருப்பதாகவும், இன்ஸமாம் கூறியுள்ளார்.

இந்த நிலையில், போட்டி நடப்பது குறித்து தங்களுக்கு ஏதும் தெரியாது என்றும், இந்தப் போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்பது குறித்தும் தங்களுக்கு தெரியாது என்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் கூறியதாக பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், இந்தப் போட்டியில் விளையாட பாகிஸ்தான் அணி வீரர்களை அணுகப்பட்டதாகவும், வீரர்கள் ஒத்துக்கொண்டதாகவும் - இன்ஸமாம் தெரிவித்துள்ளார்.

"அபுதாபி கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அதிகாரிகளிடம் நான் விளையாடுவதை உறுதி செய்துள்ளேன். அதேபோல, பிற வீரர்களும் உறுதி செய்தனர்" என்று இன்ஸமாம் கூறியுள்ளார்.

ஆனால், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை இந்தப் போட்டிக்கு மறுப்புத் தெரிவித்துள்ளதால், இந்தப் போட்டி நடைபெறுமா? என்ற சந்தேகமும் தனக்கு இருப்பதாகவும் இன்ஸமாம் தெரிவித்துள்ளார்.






குருநகரிலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிபெற்ற மாணவர்களைச் சென்.ஜேம்ஸ் கல்விமுன்னேற்றக்கழகம் கௌரவிக்கும் நிகழ்வும், பங்குத்தந்தை அருட்பணி ஆர்.எச்.சகாநாயகம் அடிகளாருடன் மாணவ மாணவிகள் நிற்பதையும், பௌதீக விஞ்ஞான பாடத்திற்காக பேராதனை பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியிருக்கும் செல்வன் விமலதாஸ் ராஜ்நிருபன் அடிகளாரிடமிருந்து விருது பெறுவதையும் காணலாம். (206)

# தமிழ்த் தேசியத்தின் வெற்றிக்கு ஒருமித்துக் குரல்கொடுப்போம்!

## மேதினக் கூட்டத்தில் ரவிராஜ் எம்.பி



தமிழினம் எந்த அந்நியனுக்கும் மண்டியிட்டு அடிபணியாத இனம். இந்த இனத்தை அடிபணியவைக்க நினைப்பவர்கள் அழிந்துபோவார்கள் என்பது காலத்தின் உண்மை என நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மேதினநிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்- நாம் தொழிலாளர் வர்க்கத்திற்குக் குரல்கொடுக்கின்றோம். இந்த நன்நாளில் எமது தேசியத்தின் வெற்றிக்கு ஓங்கிக் குரல் எழுப்பவேண்டியவர்களாகத் தற்போது நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஓர் அரசியல் பலத்தை கொடுக்கின்ற சக்தியாக, தமிழ் இனத்தின் தேசிய பலத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் எங்கள் இனத்துக்குப் பெற்றுத்தந்த இராணுவப்பலத்திற்கு உறுதுணையாக, தமிழீழ விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு இன்று அரசியல் பலத்தை மக்கள் பெற்றுக் கொடுத்துள்ளார்.

தமிழ்த் தேசத்தைப்பெறும் வகையில் தமது வாக்குகளை ஒருமித்து அளித்ததன் காரணத்தால், இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பலம் வாய்ந்த அணியாகக் காணப்படுகின்றது. இந்த அணி வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் அணியாக இன்று நாடாளுமன்றத்தில் விளங்குகின்றது. மீண்டும் எமது ஒற்றுமையை இந்தத் தொழிலாளர் தினத்தில் காட்டுவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்ப் பிரதேசம் எங்கும் தொழிலாளர்களின் பிரச்சினைகள் ஜீவனோபாயப் பிரச்சினைகளாகவே காணப்படுகின்றது. மொட்டைக்கறுப்பன் நெல் விளைந்த நிலங்களில், இன்று சட்டித் தொப்பிகள் உலா வருகின்றன. இவற்றுக்கெல்லாம் ஓர் நிரந்தர தீர்வுகிட்டவேண்டும் என்றால், நாம் உலகத்தில் தலைநிமிர்ந்து வாழ்கின்ற ஓர் இனமாக இயங்குவதற்கு உறுதிகொள்ளவேண்டும்.

இந்தவேளையிலே, தமிழ் இனம் ஒன்றுபட்டு ஒரு கொடியின்கீழ் திரண்டு தமிழ்த் தேசிய ஒற்றுமையைப் பிரதிபலித்து, விடுதலையை வென்றெடுத்த இராணுவ பலமுடைய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒன்றுபட்டு நிற்கவேண் டியவர்களாகக் காணப்படுகின்றோம். இந்த நிலைப்பாட்டை இனவாத சக்திகள் உணர்ந்துகொண்டு செயற்படவேண்டும். தமிழினம் எந்த அந்நியனுக்கும் அடிபணியாது என்பதை இந்த இடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது ஒற்றுமையைக் கண்ட இனவாதிகள், மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். சர்வதேசம் எமது ஒற்றுமையைக் கண்டு வியந்து நிற்கின்றது. எமது ஒற்றுமையை மேலோங்கச் செய்வதற்குத் தமிழ்த் தேசியத்தைக் கட்டி யெழுப்பவேண்டும். இதன்மூலம் தான் நாம் எமது தொழிலாளர் உரிமையை வென்றெடுக்கமுடியும். எனவே, நாம் ஒருமித்து ஒற்றுமை உணர்வுடன் எமது தேசியதை அடைவோம் எனத் தெரிவித்தார். (தீ)

## குடாநாட்டில் படையினரால் கைதாகி

# காணாமற்போனோரைக் கண்டுபிடிக்க ஒன்றிணைந்த முயற்சிக்கு நடவடிக்கை

யாழ்.குடாநாட்டில் காணாமற்போனவர்கள் தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து தீர்க்கமான பதில் ஒன்றைப் பெறும் வகையில், யாழ்.குடாநாட்டில் காணாமற்போனோரின்பெற்றோர் மற்றும் உறவினர்களை ஒன்றிணைத்து, ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

யாழ்.குடாநாட்டில் 1995 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினரால் கைதாகி நூற்றுக்கணக்கானோர் காணாமற் போயுள்ளனர்.

இவர்களின் நிலை தொடர்பாக அறிவதற்கு மனித உரிமை ஆணைக்குழு உட்பட, பல மனித உரிமை அமைப்புக்களிடமும் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

அத்துடன் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் மறியல் போராட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தப்பட்டு காணாமற் போனோரின் நிலையை அறிந்துகொள்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

எனினும் அரசாங்கத்திடம் இருந்து காணாமற் போனோரின் பெற்றோர் பாதுகாவலருக்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை.

இதனை அடுத்து, கோட்ட ரீதியாக காணாமற் போனோர் விபரங்களைத் திரட்டி காணாமற் போனோர் தொடர்பாக தீர்மானம் ஒன்றை அரசாங்கத்திடம் இருந்து பெறும் ஒருங்கிணைந்த முயற்சி ஒன்று மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

பொ.ஐ.மு ஆட்சிக்காலத்திலேயே குடாநாட்டில் இளைஞர்கள் காணாமற் போயிருந்தனர். இதே கட்சி மீண்டும் ஆட்சியமைத்திருக்கும் சூழலில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

## கிளாலி கடல் நீரேரியில் கடற்படையால் மீனவர் கைது

யாழ்.கிளாலிக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர், கடற்படையினரால் கைது செய்யப்பட்டார். இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது. நாகதேவன் துறையில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் மீனவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளாலியைச் சொந்த முகவரியாகவும், செம்மண்குன்றைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட 27 வயதுடைய ஏரோனி வின்சன் என்பவரே கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டவராவர்.

இதேவேளை, குறித்த தினம் கிளாலிக் கடற்பரப்பில் மீனவர் ஒருவர் கைது செய்யப்பட்டு, கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக படைவட்டாரங்கள் தெரிவித்தன.

ஆங்கிலத்தில் 'நேவி' என எழுதப்பட்ட படகில் மீன்படித்துக் கொண்டிருந்ததால் சந்தேகத்தில் இவர் கைது செய்யப்பட்டதாக படைவட்டாரங்கள் தெரிவித்தன.

## தொண்டு நிறுவனங்கள் உதவினால் மறவன்புலவில் மீளக்குடியமரலாம்!

### அந்த பகுதி மக்கள் கோரிக்கை

மறவன்புலவு பகுதிகளில் மீளக் குடியமரவுள்ள பொதுமக்களுக்குத் தொண்டர் நிறுவன அமைப் புக்கள் உதவிபுரிய முன்வந்த போதும், அங்கு இரவுவேளைகளி லும் தங்கி இருப்போருக்கே இவ் உதவிகளை வழங்கமுடியும் எனவும் இந்தத் தொண்டு நிறுவனங்கள் தெரிவித்தன.

வீடுகள் முற்றாகச் சேதமடைந்த நிலையிலும், மலசலகூட வசதிகள் எதுவும் இல்லாதநிலையும் அப்பகுதியில் காணப்படுகின்றது. எனவே, தொண்டு நிறுவனங்கள் முதலில் உதவிசெய்வதன்மூலமே தாம் குடியிருப்பதற்குத் தமது வீடுகளைப் புனரமைக்கமுடியுமென அப்பகுதியி மக்கள் தெரிவிக்கின்றனர். (29)

## சம்மேளத்தின் அனுமதியுடன் கட்டாக்காலிகளைப் பிடிக்கலாம்

தென்மராட்சி தெற்கு மறவன் புலவு, நாவற்குழி வடக்குப் பகுதிகளில் கட்டாலிக்காலி மாடுகள், ஆடுகள் என்பவற்றை மீளக்குடியேற வரும் பொதுமக்கள் பிடிப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, அந்தப் பகுதி விவசாய சம்மேளனங்களின் அனுமதியின்றிக் கட்டாக்காலி ஆடு, மாடுகளைப் பிடிக்கமுடியாது என்றும், அவ்வாறு பிடிப்பதாயின் விவசாய சம்மேளனத்தின் அனுமதி பெறப் படவேண்டும் என விவசாய சம்மேளனத் தலைவர் தெரிவித்தார். (29)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

1

முதலாவது அகவையில்



பெயர் : ஸ்ரீ. ஷாணுஜா
முகவரி : செம்பாட்டு லேன், கொக்குவில்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :----------
முகவரி :----------
பிறந்த ஆண்டு:----------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------
பெற்றோர் ஒப்பம்

## மன்னார் வைத்தியசாலையில்


# 10 மில்லியன் ரூபா செலவில் மகப்பேற்று சிகிச்சை நிலையம்

(மன்னார்)

உலகவங்கியின் உதவியுடன் மன்னார் வைத்தியசாலையில் 10 மில்லியன் ரூபா செலவில் புதிய மகப்பேற்று சிகிச்சை நிலையமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த நடவடிக்கையை நிக்கொட் நிறுவனம் பொறுப்பேற்றுச் செயற்படுத்திவருகிறது.

மன்னார் மாவட்ட வைத்திசாலையில் மிகநீண்டகாலமாகவே மகப்பேற்றுச் சிகிச்சை நிலையம் இல்லாதிருக்கும் குறையினை நீக்கும் பொருட்டே, இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



திருமறைக்கலா மன்ற மண்டப திறப்பு விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்டோரைப் படத்தில் காணலாம்.

படம்:- ஜெராட்

# திருமறைக் கலாமன்ற மண்டபத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்ற மண்டப திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை சீடா நிறுவன பிரதிநிதி நந்திகா, அருட்தந்தை பீ.செல்வராஜா, அருட்தந்தை ஜோன்சன், ராஜ்குமார், அருட்தந்தை மரிய சேவியர் அடிகளார் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து மன்றக் கொடியினை அருட்தந்தை ஜோன்சன் ராஜ்குமார் ஏற்றிவைத்தார். கலாமண்டபத்தினை சீடா நிறுவன பிரதிநிதி நந்திகா நாடாவை வெட்டி திறந்துவைத்தார்.

ஆசி உரையினை பீ.செல்வராஜா அடிகளாரும், வாழ்த்துரையினை எஸ்.ஜெயசிங்கமும் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் திருமறைக் கலாமன்ற பணியாளர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (தீ)

## நன்றித் திருப்பலி

(வடமராட்சி)

அண்மையில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த அன்ரன் பீற்றர் திருமகன் தனது நன்றித் திருப்பலியை பருத்தித்துறை தொம்மையா ஆலயத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி கொடுக்கவுள்ளனர்.

திருப்பலிக்கான சகல ஏற்பாடுகளையும் பருத்தித்துறை பங்குத்தந்தையும் பொதுமக்களும் மேற்கொண்டுள்ளனர். (17)




# ஒரு தேசம் முகமிழந்து...

**டானியல் ஜீவா**




மனோரம்மியமான மாலைவேளை - பாஸ்நிலவின் ஒளியை பண்ணை வீதியில் நடைப்பயணத்தில் அனுபவித்தோம். மதியின் அழகில் வாசமிழந்தோம். காற்றின் சுகந்தம் கண்களை மூடவைத்தது. வாடை பெயர்ந்துபோக மகிழ்ச்சியின் வரவில் சோளகம்.

உதிரப் புனல் ஓடும் வீதியில் கடந்துபோன வருடங்களில் அவ்வப்போது ஒரு இடைவெளியும், சிறுமாற்றமும் வைகறையாய் எட்டிப் பார்த்தபோதும் நிரந்தர வெளிச்சம் இன்னும் நெடுந்தூரம்தான். வசந்த காலம் வாசலில் வந்ததாக மக்கள் மகிழ்ந்திருந்த வேளையில்தான் அந்த யுத்தம் தொடங்கியது.

அந்தக் கிராமத்திலிருந்து குடும்பம் குடும்பமாக இடம் பெயர்ந்து வேலணைக்கும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் போய்விட்டார்கள். சில குடும்பங்கள் மட்டும் "நீக்கிலாரே" தஞ்சம் என்று கோயிலுக்குள் இருந்துவிட்டனர். கோட்டையை பிடிப்பதற்காகக் காக்கை தீவுப்பாதையால் வந்த இந்திய இராணுவம் கடற்கரை வீதியால் முன்னேறிச் சென்றபோது கோயிலுக்குள் இருந்தவர்கள் சிறைக் கைதிகளானார்கள். காலையில் குறிப்பிட்ட நேரம்வரை வீட்டைப் பார்ப்பதற்காக வெளியில் விடுவார்கள். மிகுதி நேரம் முழுவதும் கோயில் வளவைச் சுற்றியே வாழ்க்கை. கோயிலின் முன்பாக சீக்கிய இராணுவம் எந்நேரமும் காவலில் நிற்கும்.

சீக்கிய இராணுவம் என்றதும் சின்ராசாவுக்கு மதுரையில் கூடல்நகர் அகதி முகாமில் 1985 ஆம் ஆண்டு இருந்தபோது நடந்த நிகழ்வுகள்தான் அவன் நினைவுக்கு வருகின்றன. அங்கு வாழ்ந்த காலத்தில் பல கசப்பான அனுபவங்களை உள்வாங்கினான். அவற்றில் இந்திராகாந்தி கொல்லப் பட்டபோது கிடைத்த அனுபவம் அவனுக்கு ஒரு வகையானது. ஒரு சீக்கிய இராணுவம் சுட்டதற்காக அப்பாவி சீக்கியர்கள் கொல்லப்பட்டார்கள். அப்போதெல்லாம் கவலைப்பட்டான், கண்ணீர் வடித்தான் இப்போது இந்தச் சீக்கிய இராணுவத்தின் அடாவடித்தனத்தை நினைத்து ஆத்திரம் கொண்டான். குபபென்று வந்த கோபத்தில் உடல் உறைந்தது.

சின்ராசாவுக்கு மனைவியின் இழப்பால் மனசு சிதிலமடைந்துபோனது. முறுக்கிய மீசையும் தேர்வடம் போல் கழுத்தைச் சுற்றியபடி கிடக்கும் தங்கச் சங்கிலியும், மோதிரம் நிறைந்த விரல்களும், கம்பீர நடையும், நெடும்பனை உயரமும் கொண்டவன். அந்த கிராமத்து மக்களால் அதிகம் நேசிக்கப்படுகின்ற மனிதன்தான் சின்ராசா. அவனுடைய பெயருக்கு பொருத்தம்போல் அவன் ஒரு "சின்ன"ராசாவாகத்தான் ஒருகாலத்தில் இருந்தான். விடுவலை வள்ளத்திலும் ஒருதரும் அவனை குறைசொல்வது கிடையாது. தொழிலை நடத்துவதே அவனது தனித் திறமையால்தான்,

இப்போது சின்ராசா என்ன செய்வதென்று புரியாத நிலைமையில்... மெலிந்துபோன உடல் தோற்றமும், கிழிந்துபோன வலையைப் போல் அவனது உடலை ஒட்டிக் கொண்டிருக்கும் பெனியனும் முகமே வெண்மை வேளாண்மை விதைத்தது போல். எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற ஏக்கப் பெருமூச்சோடு காற்று காவிவரும் கொடுமையை கன்னத்தில் இரு கைகளையும் மரத்துக்கு முண்டு கொடுத்தபடி உதட்டில் ஒட்டு பீடியை குடித்துக் கொண்டு யோசித்துக் கொண்டிருந்தான்.

"இந்த மனுசனுக்குச் சொன்னாலும் கேக்காது... காலையிலிருந்து சொல்லிக் கொண்டுதான் இருக்கிறன் அவங்களுக்கு ஆக்கள் இல்லையென்டதற்காக இந்தாலை பிடிச்ச பிடியாக நிற்கிறாங்க... என்னென ஐயா சொல்லனை நான் வரமாட்டேனென்டு" சின்ராசாவைப் பார்த்தபடி இளைய மகள் சொன்னாள். "எல்லாமே போய்ச்சுது உயிரத்தானும் காக்க சாப்பிடவேண்டாமா...? நேற்றுக் குடித்த தேத்தண்ணீயோடு நீயும் குழந்தைகளும், நான்தான் கட்டையிலே போறவன் இந்தப் பிஞ்சு குழந்தைகள் என்ன பாவம் செய்ததுகள் இப்படி உத்தரிப்பதற்கு..." என்றான் சின்ராசா.

சின்ராசாவுக்கு இரண்டு பெண்கள். மூத்தவள் முத்துமணியை கரையூரில் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டான். இளையவள் சின்னமணியை ஊரோடு மாப்பிளையாக இருக்க வேண்டுமென்பதற்காக யோசேப்பின்ர மகனுக்கு கல்யாணம் செய்து வைத்தான். சின்ராசாவின் மனைவி இறந்த நாளிலிருந்து சின்னமணியோடுதான் சாப்பாடும், இருப்பும், தொழிலுக்குப் போவதும் பேரப்பிள்ளைகளோடு விளையாடுவதிலும் நேரம் போய்விடும். சின்னமணியின் மூத்த மகன் ஏழாம் வகுப்பு படிக்கிறான். இரண்டு வருடங்களுக்கு முன்தான் தன் கணவனை இழந்தாள் சின்னமணி. வறுமையில் அனுபவிக்கிற வேதனையைவிட அவளுடைய கணவனை இழந்த துயர்தான் அவளுக்கு இன்னும் மறக்க முடியாமல் இருக்கிறது. அவள் கண்முன்னே அவன் நினைவுதோன்றியது.

மனசு ஒரு கணம் சஞ்சலப்பட்டது. மனசை சரி செய்து ஒரு நிலைக்குக் கொண்டுவர முடியாமல் அவன் நினைவே மீண்டும் மீண்டும் வந்தது. நெஞ்சு சோகத்தால் முட்டியது. கண் முன்னே அவன் தோன்றினான்.

ஒருநாள் கடலுக்குப் போயிற்று வந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் மூத்தவனின் அழுகைச் சத்தம் கேட்டது.

"என்னடி சின்னமணி புள்ளே ஏன் அழுகுதென்டு கேளன்" என்றான்.


"இன்டைக்குக் காலையிலே பள்ளிக் கூடத்திலே "தமிழ்ப் புத்தகம்" வாங்கிக்கொண்டு வரலேயென்டு அடிச்சிட்டாராம் வாத்தி. அதான் அழுது கொண்டு நிற்கிறான். நான் சொன்னாலும் கேட்கிறான் இல்லை"

"அழ வேண்டாமென்டு சொல்லு. நான் சாப்பிட்டுப்போட்டு ரவுனுக்கு போய் வாங்கிக் கொண்டு வாறன்..." என்றான். சாப்பிட்டது அரையும் குறையுமாகக் கடல் வெக்கையோடு புத்தகசாலைக்கு போனவன்தான் இன்றுவரை வீடு திரும்பவில்லை. யாரோ அவனை மறித்து மினிவானில் ஏற்றிக் கொண்டு போனவங்களாம். அவளும் இன்றுவரை அவனுக்காகக் கசிந்து, உருகி... கடலுக்குள் கரைந்துபோன மீனவனுக்காக எங்க ஊர்ப் பெண்கள் காத்திருப்பதுபோல் காத்திருக்கிறாள்.

சின்னமணி கடவுள் பக்தி அதிகம் உள்ளவள். அகதி வாழ்வில் கூடுதலான நேரத்தை கோயிலுக்குள்ளேயே செலவு செய்வாள். ஒவ்வொரு செவ்வாயும் பாசையூர் அந்தோனியார் கோயிலுக்குத் தவறாமல் போய் வருவாள். இப்ப எப்படித்தான் அவளால் போக முடியும்....?

கந்தப்பு சம்மாட்டியும் சின்ராசாவை விட்டபாடில்லை.

"சின்ராசா மேவலைக்கு ஒருத்தர் தான் குறையுது நீ வந்தால்



சரியாய் போய்விடும்" என் றான். சின்ராசாவின் குடும்பத்தின் மேலுள்ள அன்பினால் அல்ல தன்னுடைய தொழிலை நன்றாக நடத்தக் கூடியவன் என்ற ஒரே நோக்கத்திற்காகவே.

"நாங்கள் பாஸ் எடுக்க எவ்வளவு பாடுபட்டனாங்கள் தெரியுமோ சின்ராசா...? மூன்று மணித்தியாலங்கள் தந்தவங்க.. அதுவும் கொண்டிசனோட... முனங்குந்த அங்காலே கொட்டடி பக்கம் போகாமலும், இங்கால காக்கை தீவுப்பக்கமும் போகாமல் துறைக்குள்ளேயே விடுவலையை வைக்க "வேண்டுமாம்... ஐஞ்சு ரூபா பங்குக்குக் கிடைச்சாலும் ஆருதரப் போறாங்க..." கெஞ்சும் குரலில் சம்மாட்டி கேட்டான். சின்ராசா கோபம் கலந்த பெருமூச்சை விட்டுக்கொண்டு.

"இவங்கள் ஆரு வரச்சொன்னது... எங்கட சனத்தை ஏன் சுட வேண்டும்...?" கந்தையா குறுக்கிட்டு

"எங்கட பொடியன்கள் சுட்டதால் தான் அவங்களும் சுடத் தொடங்கினாங்க..." என்றான்.

"ம்... அதற்கு சுட்டவங்களப் பார்த்து சுடவேண்டியது தானே... அப்பாவிச் சனங்கள் என்ன செய்ததுகள்..? அவையட நாட்டிலேயே இமயம் முதல் குமரிவரை ஆயிரத்தெட்டு பிரச்சினை. அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வழியக்காணல... இங்க வந்திருக்கினமாம் எங்கட பிரச்சினை தீர்க்க..." என்று சொல்லிக் கொண்டே இடுப்பில் செருகி வைத்திருந்த மடிப் பொட்டியை எடுத்தான் சின்ராசா.

சம்மாட்டி சரியென்று ஏற்றுக் கொள்வதுபோல் மௌனமாக நின்றான்.

"சின்ராசாவின் விசர்க் கதையை பாரேன்... அங்காலே அவங்க நிற்கிறான்கள் கேட்டாலும் கொண்டாலும்" என்றாள் கந்தையாவின் மனைவி. இவர்கள் கதைத்துக் கொண்டிருந்தவை எல்லாவற்றையும் கோயிலின் முகப்பை சுற்றி போடப்பட்டிருந்த கம்பியைப் பிடித்துக் கொண்டிருந்த ஆனந்தன் அவதானமாக கேட்டுக் கொண்டிருந்தான். இந்த விவாதங்கள் சூடுதணிய எல்லோரும் கடலுக்கு போவதற்கு ஆயத்தமானவர்கள்.

சின்ராசாவின் மடிப்பெட்டிக்குள் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை, பீடி போன்றவற்றை வைத்து கடல் தண்ணீரில் நனையாதவாறு பொலித்தீன் பையினால் மூடி வைத்திருப்பது வழக்கம். ஆயினும் இப்போது பீடியைத் தவிர வேறு ஒன்றுமில்லை. பீடியை எடுத்து வாயில் வைத்தபடி...

"கந்தையாண்ணே கடலுக்குப் போவமா?" என்றான் சின்ராசா.

'அம்மையா' என்று அழுதபடி சின்னமணியின் இளையவள் ஓடிவந்தாள். சின்ராசா தன் உடலோடு அணைத்து இரண்டு கன்னத்திலுமிருந்து வழிந்த கண்ணீரை துடைத்துவிட்டு அவளது கன்னத்தில் மெல்ல முத்தமிட்டான். அவளது அழுகை நின்றுவிட்டது.

குண்டுகள் துளைக்காதபடி கடல் தொழிலாளர் வள்ளத்தைக் கடலுக்குள் அமுக்கி விட்டிருந்தார்கள். விடுவலைக்கு பெரிய வள்ளம் ஒன்றும், தொடுவைக்கென்று சிறிய வள்ளமும் பாவிப்பது வழக்கம். பெரிய வள்ளத்திற்குள் நிறைந்து கிடந்த தண்ணீரை பட்டையாலும், வாளியாலும் அள்ளி ஊத்திக் கொண்டிருந்தார்கள். சின்ன வள்ளத்தையும் தாட்டு வைத்திருந்ததால் அதற்குள் கிடந்த தண்ணீரை ஏற்கனவே இறைத்து விட்டார்கள்.

கந்தையாவும், சின்ராசாவும் கடற்கரையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். அரை மணித்தியாலத்திற்குள் எல்லாவற்றையும் விரைவாக முடித்துக் கொண்டு ஏலேலோ பாடலோடு தோணிகள் தொழிலாளர்களைச் சுமந்து கொண்டு எதிராய் கடல் அலையைக் கிழித்துக்கொண்டு நகர, உவர்நீர் வெண் நுரை கக்கியது.

எம் சொந்தங்களின் செங்குருதிகள் இக்கடலோடு தானே கரைந்துபோனது அல்லவா...? காற்றினில் கறை சேற்றினில் பிணம். ஆயினும் மீனவன் வாழ்வின் மீது தீராத காதல் கொள்வான். நலிந்த வாழ்விலும் நெஞ்சினில் நாளைய வாழ்வுக்கான நம்பிக்கை விதை... கடற்கரை வெளியில் கனவுகள் விரியும். அவனது விழிகளின் உயிர்ப்பெல்லாம் கடல்தான்.

தொழிலாளர்களை அனுப்பிவிட்டு கடலையே பார்த்துக் கொண்டிருந்த கந்தப்பு, தொடுவை வள்ளத்திற்குள் நின்றவர்கள் ஓலைக் கயிற்றை வளைத்த வேகத்தைக் கண்டு ஏதோ வள்ளத்தில் நின்றவர்களுக்கு நடந்ததுபோல் உணர்ந்தான். பதட்ட நிலையில் அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டிருந்தான். விழிகள் பிதுங்கியது கொஞ்ச நேரம்கூட நிதானமாக நிக்க முடியாதநிலை அவனுக்கு. சில நிமிடங்களுக்குள் கோயிலில் நின்றவர்களுக்கு சம்பவம் காற்றாய்ப் பறந்தது.

ஆலமரத்திற்கும் சிறுவர் பாடசாலைக்கும் இடையில் இருக்கும் கல்லறை ஆண்டவர் சுருபத்திற்கு முன்னால் முழங்கால் இருந்துகொண்டு சின்ன மணி

"ஆண்டவனே ஏன் எங்களுக்கென்று இந்தச் சிலுவையை தந்தாய. மண்ணில் மனிதனாய் பிறந்து தெய்வமானாய். வேதனை நிறைந்த துயர நாட்களை ஏன் தொடரவிடு கிறாய். இன்னும் எத் தனை நாட்கள் இப் படியே வாழ்வது?" சின்ன மணியின் விழிகளிலிருந்து கண்ணீர் கசிந்தது. வேத் துக் களைக்க வந்த கந்தையாவின் மனைவி.

"அடியே சின்னமணி உங்கட ஐயாவுக்கு விடுவலை வள்ளத்தில் ஏதோ நடந்திட்டென்னு எல்லோரும் ஓடியி னம். நீயென்ன இதிலே இருந்து அழுது கொண்டி ருக்கிறாய்" சின்னமணி விக்கித்துப் போனாள். கடைசிப் பிள்ளையை கையில் தூக்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக கடற்கரையை நோக்கி போனாள். கடல் பெருக் கில்லாததால் மெல்லிய அலைகள் மட்டுமே கரையில் வந்து மோதிக்கொண்டிருந்தன.

யுத்தகால அனர்த் தங்களைக் கடற்கரை கவ்வியிருந்தது. ஊதல் காற்றும் ஓயாது வீசிக் கொண்டிருந்தது. கடற்கரையை ஒட்டியிருந்த வீடுகள் சிதைவடைந்தும், ஓலைக் குடிசைகள் எரிந்த குறையிலும் காணப்பட்டன. தென்னை மரங்கள்கூட ஷெல்பட்டு சோகமே உருவாகிநின்றன.

வள்ளம் வந்த வேகத்தில் அணியத்தின் முன்பகுதி கரைக்கு மேலே ஏறிவிட்டது. யப்பான் மீன், கெழுறுகளின் சலசலப்பு தண்ணீரில். சேற்றினில் புதையுண்டுபோன கால்களோடு வள்ளத்தைச் சுற்றி அழுத விழிகளோடு சிலர் நெஞ்சில் அடித்து ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தார்கள். சின்னமணி வள்ளத்திற்கு அருகே சென்று தலையை கீழே குனிந்து நடுப்பலகைக்கு பக்கமாக கிடந்த உடலை பார்த்தாள். கண்டதும் ஓவென்று கத்தினாள். "ஐயா இவ்வளவு கெதியிலே விட்டிட்டு போயிட்டிங்களே..." அலை ஓசையையும் மீறி விண்ணைத் தொட்டது அழுகை ஒலி. சின்னமணியின் சிறு விழிகள் சிவந்து விட்டன. ஆனந்தன் ஆட்களின் நெரிசலுக்கிடையில் நுழைந்து வள்ளத்தை எட்டிப்பார்த்தான். விக்கித்துப் போனான். அவனுள் ஒருவித வைராக்கியம் மனதில் எழுந்தது. இழந்ததற்கான தேடல் கண்களில்... மறுகணமே இடத்தை விட்டு விலகிவிட்டான்.

ஐம்பது வயது நிரம்பிய மனிதர் அன்றாடம் ஜீவத்துக்காக அயராது போராடுகின்ற ஏலேலோ பாடகன் எதற்காக செப்புக் குண்டுக்கு இரையானான்? மரக்கோல் பிடித்து மரத்துப்போன கைகள், உப்புக் கரைசலில் ஊறித் திரண்ட உடல், அந்நிய மிருக வெறிக்கு இரையாகி கோவணத்துணியோடு கிடக்கிறது. கூட்டத்தில் நின்றவர்களில் ஒருவன் "கோயிலடியில் நின்ற சீக்கியன் போகச் சொல்லிப்போட்டு காக்கை தீவில் நின்வறன் சுட்டுப்போட்டான்" என்றான். வள்ளம் முழுவதும் இரத்தக் கட்டிகளால்... உடலிருந்து பெருக்கெடுக்கும் இரத்தத்தை கட்டுப்படுத்த நாலு முழு வேட்டியால் இறுகக் கட்டினார்கள். நின்றவர்களில் ஐந்து பேர் சேர்ந்து தூக்கினார்கள். உடலிலிருந்து இரத்தத் துளிகளாய் வழிந்தது. சின்னமணியின் வீட்டிற்கு தூக்கிக் கொணடு போனார்கள்.

இன்று சின்னமணியின் வீட்டில் மட்டுமல்ல ஒப்பாரி ஓலம், எமது தெருவெல்லாம்தான். அன்று முழுவதும் அழுகைகளோடும், அடக்கம் செய்வதிலும் ஈடுபட்டுக்கொண்டு இருந்தவர்கள் ஆனந்தனை மறந்துவிட்டார்கள். இரவு எட்டு மணியாகியும் ஆனந்தன் வீட்டிற்கு வரவில்லை. சின்னமணி ஆனந்தனை தேடத்தொடங்கினாள்... ★

# என்னை மறந்துவிடு!

மரநிழலின் கீழ் இருந்து
படித்துக் கொண்டிருக்கும் போது
பின்னால் வந்து
உனது இரு கையினால்
எனது இரு கண்ணினை
மூடியோ,
அல்லது தலையில் குட்டியோ
குழப்புவாய்.
இப்பொழுது, அந்த மரமும்
நிழலும், நீயும் இல்லை
நான் படிக்கவுமில்லை
ஆனால், எப்படிக் குழப்புகின்றாய்
தெரியாது!

நானாக சண்டை போட்டு
உன்னை அழவைத்துவிட,
என்னோடு கதைக்காமல்
இருந்துவிடுவாய்,
உன்னில் பிழை இருந்தும்
மன்னிப்பு கேட்டு
ஏதாவதொரு கதை சொல்லி
சிரிக்க வைத்தும் விடுவேன்
இப்பொழுது, எனக்கு நானே
சிரிக்க வைத்தும், அழவைத்தும்
கொண்டிருக்கிறேன்...!

நிறையக் கதைக்கமாட்டாய்
தலையாட்ட இனிநான் இல்லை,
அவசரமில்லாமல் தூங்குவாய்
எழுப்புவதற்கு இனிநான் இல்லை,
தேடாமல் இருப்பாய்
தொலைவதற்கு இனி நான் இல்லை,
எங்கே என்றாலும் போய்
வருவாய்,
கூடவர இனிநான் இல்லை,
கண்ணாடி முன் சேலை கட்டிய
அழகைப் பார்த்து
ரசிப்பாய்,
உன்னைப் பார்ப்பதற்கு
இனிநான் இல்லை!

தெரியாததை தேடி
தெரிந்துகொண்ட பின்னர்
கூடிவிட்டது தெரியாததுதான்.
கடலில் குளித்து ஆனந்தம்
அடைந்தாய்.
பூங்காக்களைப் பார்த்து ஆறுதல்
அடைந்தாய்,
பல ஊர்களைப் பார்த்து
தெரிந்து கொண்டாய்,
ஒருபோதும் நீ
நினைத்ததேயில்லை
உன்னைப் பார்த்து அதுவும்
ஆறுதலடைந்ததா என்று!

மற்றவர்களைப்போல்
உனக்கும் நிறைய ஆசை
தான்,
வீட்டுற்கு முன்னால் நிறையப்
பூமரங்கள் வளர்த்தாய்,
அந்த மரத்துப் பூவில்
மாலையும் கட்டினாய்,
அந்தப் பூவை எடுத்து தலையில்
சூடினாய்,
பக்கத்தில் நின்று படமும்
எடுத்தாய்,
ஆனால், அந்தப் பூமரங்கள்
நினைத்ததில்லை
உன் தலையில் சூடியிருப்பது
உன் வீட்டுப் பூக்களை
மட்டுமென்று!

பனிக்கால இரவுகளில்
பனைகளின் கீழ் இருந்து
நீ கறுப்பு இல்லை நான் கறுப்பு
என்று சொல்ல
மின் மினியிடம் கெஞ்சினாய்
வெளிச்சம் கொடு என்று
பார்வை உனக்கோ வெளிச்சத்தின்
மேல்
எனக்கோ இரவின் மேல்!

- தச்சா -

## இலக்கிய முத்து

கதிரவனது கனற் கதிர்களால் அந்தச் சாலையின் மணற் துகள்கள் எல்லாம் வெள்ளித்துகள்களாகின்றன. தென்றல் காற்றுக்கூட தீயாகச் சுடுகின்றது. கதிரவன் கதிர்களால் ஆங்காங்கே கானல் நீர்த்தடாகங்கள் தென்படுகின்றன. ஒதுங்கிக் கொள்வதற்குக்கூட ஒரு விருட்சமில்லை அந்தச் சாலையிலே. வெப்பத்திற்குத் தப்புவதற்காக மாந்தரெல்லாம் ஒதுக்கிவிட்டனர் தம்குடிசைகளிலே. ஆனால், அந்தக் கந்தலாடை அணிந்த உருவம் மட்டும் ஏனோ நடந்து செல்கின்றது.



வதனத்திலுள்ள வறுமையின் கோடுகளும், வளைந்த கூன் முதுகும், ஆங்காங்கே சிறு வெண்ணிறக்கம்பிகள் போன்று கம்பீரமாக காட்சிகொடுக்கும் தாடியும், கையிலே உள்ளபையும், மெய்யின் வருத்தத்தினாலே தள்ளாடும் கால்களும் அவனை ஒரு தமிழ்ப் புலவன் எனக் கட்டியங்கூறுகின்றன.

அவன் வேறுயாருமல்ல. தன் சொல்வீச்சுகளால் எல்லோரையும் துளைத் தெடுக்கும் காளமேகம். உள்ளதை உள்ளபடி உரைக்கும் உன்னதக் கலைஞன். போர் வீரனின் வாளி

### மோரல்ல நீர்

லும் பார்க்க ஒரு எழுத்தாளனின் பேனா கூர்மையானது என்பதற்கு இவனது கவித்துவமே சான்று.

ஆதவனது அனற்கதிர்களால் அவனது தேகம் மருண்டு போகின்றது, கண்கள் இருண்டு போகின்றன. இனியும் முடியாது என்ற நிர்ப்பந்தநிலையில், அவனது உடல் தரித்து நிற்கவேண்டும் என மனுத்தாக்கல் செய்கின்றது. மனுவை விசாரித்த மனம் அனுமதி அளிக்கின்றது. அந்தச் சாலையிலே அமர்கின்றான் - வசைபாடும் காளமேகம்.

இருண்டுபோன கண்களுக்கு ஒரு உருவம் தெரிகின்றது. தலையிலே மோர்ப்பானையை சுமந்துவரும் அந்தக் கிழவி - காளமேகத்தின் கண்களுக்குத் தேவதையாகத் தெரிகின்றாள். உண்மையில் உருக்கமுள்ளவன் தான் ஆண்டவன் என எண்ணிய காளமேகம், ஒரு கிண்ணம் மோரினை வேண்டிப் பருகுகின்றான். தாகத்தின் வேகத்தில் ஏதும் புரியவில்லை. இரண்டாவது கிண்ணம் இறங்கியபோது தணிந்தது தாகம்.

அப்போது தான் எழுந்தது ஒரு வினா? இது மோரில் கலந்த நீரா? அல்லது நீரில் கலந்த மோரா? காளமேகத்தின் கவித்துவம் தன் சொல்லம்புகளை வீசுகின்றது. மோரினைப் பாடுவது போன்று நீரினையை விற்கின்றாள் கிழவி எனச் சாடுகின்றது காளமேகத்தின் கவித்துவம்.

'மோரே நீ அண்றாட வெளியில் அலைந்து திரியும்போது, உன் பெயர் மேகம். வானின்று இறங்கி வையகத்தை நனைக்கும்போது உன் பெயர் நீர். இப்போ இந்த ஆய்ச்சியர் குலக் கிழவியின் கையில் வந்தவுடன் மோர் என்ற பெயரையும் பெற்றுவிட்டாயே' என ஆய்ச்சியர் குலக்கிழவி விற்பது மோரல்ல - நீர் என சொல்லாமற் சொல்லி விடுகின்றான் நாயக்கர் காலத்தின் புலவர் திலகம்.

'காரென்று பேர் படைத்தாய், ககனத்துறும்போது
நீ ரென்று பேர் படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற் பின்
வாரென்று மென் முலையா ராச்சியர் கைவந்ததற் பின்
மோரென்று பேர் படைத்தாய் முப்பேரும் பெற்றாயே'. (காளமேகம்)

- லெஸ்லி -



## மரபுகளும் மாற்றங்களும்...

**பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தனது தாயாரின் நினைவாக எழுதி வெளியிட்டுள்ள நூலே 'என் அம்மாவின் கதை' என்ற நூலாகும். இந்த நூலில் வருகின்ற எண்ணக்கருவாக்கமும் ஆரம்ப அறிவிப்பும் என ற பகுதியை இங்கு வாசகர்களுக்காகத் தருகிறோம்.**

பண்பாடு என்பது வாழ்க்கை முறையாகவும் வாழ்வுக்கான அர்த்தமாகவும் அமைவது.

சமூகத்தின் அனைத்து மக்களுக்கும் சமமான வாழ்வினைத்தரும் திசையில் பண்பாட்டினை ஜனநாயகப்படுத்தும் பாரிய பணியிலே சமூக மேம்பாட்டில் உழைக்கும் அனைவரும் இன்று இணைந்து செயற்படவேண்டியுள்ளது. இந்நிலையில் தேசிய அளவில் கொள்கை வகுத்தலும், செயற்பாடும் முதன்மைப் பணிகளாகின்றன.

மேம்பாடு என்பதனை வெறுமனே தலாவீத வருமானத்திர ளாக அல்லது பொருள்சார் வளர்ச்சியாக கருதிய நிலைமை இன்று மாற்றம் காணும். மேம்பாட்டுக்கான இன்றைய சமூகவியல் வரைவிலக்கணங்கள் தனித்துவமானதும் ஒன்றுடன் ஒன்று தொடர் பானதுமான பொருளாதார, சமூக, பண்பாட்டுக்கூறுகளை உள்ள டக்கி நிற்கின்றன. இந்த வகையில் மூன்றாம் உலக நாடுகளின் மேம்பாடு தொடர்பான போட்ஸின் (**Ports**) வரைவிலக்கணம் குறிப்பிடத்தக்கது.

நீடித்து நிலைக்கக்கூடிய திசையில் தேசிய உற்பத்தியின் துரித அதிகரிப்பு இதன்வழி எதிர்கால விருத்திக்கு வழிகாட்டும் பொருளாதார சுதந்திரம்.

சமத்துவமான முறையில் வருமானப் பங்கீடு, இதன்வழி சமூகப் பண்டங்களான கல்வி, சுகாதார சேவைகள் போதுமான வீட்டுவசதிகள், பொழுதுபோக்கு வாய்ப்புக்கள், அரசியல் முடிவுகள் எடுத்தலில் பங்கேற்பு.

தேசிய அடையாளத்தையும், மரபுகளையும் உறுதிப்படுத்தும் திசையில் மேட்டுக்குடிகள், பொதுமக்கள் என்ற வேறுபாடுகள் அற்ற புதிய சுயபிரதிமைகளை காணல் இதன்வழி இரண்டாந்தர பிரஜை என்ற உணர்வுநிலையை இல்லாதொழித்தல் பண்பாடு உருமாற்றம் என்ற தலைப்பின் கீழ் போட்ஸின் வரைவிலக்கணம் மேற்கண்டவாறு அமையும்.

பொருளாதார மேம்பாடு, சமூக, பண்பாட்டு உருமாற்றங்களை விளைவிக்கும் சமூக - பண்பாட்டு உருமாற்றம், பொருளாதார விருத்தியினைத் தீர்மானிக்கும்.

இந்த வகையில் மேம்பாடு என்பது ஒரு சமூகம் அவாவி நிற்கும் இலக்கினை நோக்கிய, பொருள்சார்-பொருள்சாரா கூறுகளை உள்ளடக்கிய சமூக முழுமையின் மேல்நோக்கிய அசைவு என்றாகின்றது. இவ்வாறானதொரு கருத்தியல் பின்னணியிலேயே மேம்பாட்டில் பண்பாட்டின் இடம்பற்றிய கவனம் இன்று அதிகரித்துள்ளது. சமூக ஒழுங்கு , பொருளாதார விருத்தி,வெளிவிவகாரம், தேசியபாதுகாப்பு என்கின்ற குவியங்களைத் தாண்டி, பண்பாட்டுக் கொள்கை (**Cultural Policy**) பற்றி இன்றைய அரசுகள் அக்கறை கொள்வது இந்தச் சிந்தனை விழிப்பின் தடத்தில்தான்.

நவீன வாழ்வில் ஒரு தேசத்து மக்களின் அபிலாஷைகளை எய்தும் வகையில் பண்பாட்டுக் கொள்கை வகுக்கப்படவேண்டும். சுய பண்பாட்டு எழுச்சியும், வளர்ச்சியுமே இங்கு உச்ச இலக்குகளாகும். நவீன வாழ்வின் மாற்றங்களிடை சுயத்தைக்காணும், பேணும் இந்தப் பண்பாட்டுக் கொள்கையின் இன்றியமையாமை எனது புலங்களில் பெரிதும் உணரப்படுவது. குடியேற்ற நாட்டாதிக்க கால செல்வாக்கினுள் முடமாகிப்போன சுதேச அடையாளங்களை மீட்டெடுத்ததிலிருந்து இன்றைய

நவகுடியேற்றவாத உலகமயமாக்க அலைகளிடை தொலைந்துபோன சுயங்களை மீளமைத்தல் வரை பண்பாட்டுப் பணிகள் எங்களைக் காத்திருக்கின்றன. மேம்பாடு என்றாலே அது மேலைமயமாக்கம் தான் என்ற மயக்கம் கலைந்தாக வேண்டும்.

மரபு வழிப்பண்பாட்டின் செழுமையான அனுபவங்கள் பற்றிய மறதிக்குரிய மருந்தினை உடன் கண்டாக வேண்டும். கடந்த காலம் பற்றிய உணர்வை இழத்தலின் ஆபத்து. இன்றைய வாழ்வின் அனைத்து முகங்களிலும் உணரப்படுகின்றது.

நவீனத்தை மரபின் எதிரியாக்கி அதனையே மேம்பாட்டின் சாரமாகியதில் நாம் இழந்தவைகள் தான் அதிகமெனலாம். விண்ணைத் தொடும் அறிவு வந்தது உண்மை ஆனால், மண்ணுள் மனிதம் புதையும் நிலைகளுக்கு அது துணையாகி விடக்கூடாது.

தொழில்நுட்பத்தின் உச்சம் மனித உயிர்களின் அழிவில் முடிதல் கூடாது. அறிவு அநீதிகளின் பகுதிகளை அகற்றுதலும் இயல்பாய் இணைதல் வேண்டும்.

பண்பாட்டின் புத்தாக்கம் என்பது பண்பாட்டுக் கொள்கையின் ஆதார சுருதியாய் அமையும் போது இந்த இணைவும், இசைவும் கைவசமாகும். பண்பாட்டு புத்தாக்கம் என்ற கனவு மெய்ப்பட பண்பாடு தொடர்பான விழிப்புணர்வு விதைப்பதில் சமூக உணர்வுகொண்ட அனைத்து பிரிவினரினதும் ஒன்றிணைதல் இன்றியமையாததாகின்றது.

கவிஞர்கள், கலைஞர்கள் சமூக சிந்தனையாளர்கள் - சமூக, பண்பாட்டு இயக்கமாக இந்த ஒன்றிணைப்பு முகிழ்தலும் அவசியமானதாகின்றது. அநீதியான மேலாண்மைகளைக் கேள்விக்குள்ளாக்கும் அழகான நற்பண்புகளை நிலை பேறாக்கும் பண்பாட்டு இயக்கமே மேம்பாடு தொடர்பான பண்பாட்டுக் கொள்கைகளின் செயல் முகவரெனலாம். குடும்பம் - சாதி - சமயம் - அறிவியல் அமைப்பு என அனைத்து புலங்களிலும் பண்பாட்டு இயக்கங்களின் அறிவும், அனுபவமும் பயன் காணவேண்டும். நவீன வாழ்வின் உலகமயமாக்க அலைகளின் நுகர்வு கலாசார நுரைகளில் துரும்பாகி அலையும் சுதேச பண்பாடுகளை மீட்கும், புதுக்கும் இந்த பணியை இனியும் தாமதமின்றி தீவிரப்படுத்த வேண்டும்.

காலம் தாழ்த்தியதில் கரைந்து போன பண்பாடுகளின் அனுபவங்கள் இந்த வகையில் எங்களுக்கான எச்சரிக்கைகளாகலாம். அதேவேளைகளில் சுயவிழிப்புடன், உயிர்ப்புடன் பண்பாட்டு மறுமலர்ச்சி வழி மேம்பட்ட சமூக அநுபவங்கள் வழிகாட்டிகளாகலாம்.

நாங்கள் என்ன செய்யப்போகின்றோம்..........

தனித்தும், கூட்டாகவும் சாதகமான பதிலை எழுதும் சமூகப் பொறுப்பு எங்கள் ஒவ்வொருவருக்கும் உரியதாகின்றது. ☆

**அரசியல் நோக்கு** **கனகரவி**

# ஒன்றுபட்ட செயற்பாட்டின் மூலமே தமிழினம் பலமாக இருக்க முடியும்

பதின்மூன்றாவது நாடாளுமன்றத்திற்கான சபாநாயகரை தெரிவுசெய்யும் வாக்களிப்பின் போது, இலங்கை நாடாளுமன்ற வரலாற்றிலே இதுவரை நிகழாத... மககளைக் கருத்திலெடுக்காத சிந்தனையுடன் கூடியவர்களாகவே சிங்கள தேசத்தின் அரசியல் வாதிகள் நடந்துள்ளனர். பார்ப்போர் கேலிசெய்யக்கூடிய வகையில் அவர்கள் நாடாளுமன்றத்தை தெருச்சண்டை செய்யுமிடம்போல மாற்றியிருந்தார்கள். மக்களின் வாக்குகளுக்காக கைகூப்பி, வாக்குறுதிகளை அள்ளிவீசி பெற்றவர்கள், மக்களின் பிரதிநிதிகளான பின் தாமும் வாக்களிக்கவேண்டிய தேவையேற்பட்டபோது, மிகவும் கீழ்த்தரமாக நடந்துள்ளனர் என்றே கூறவேண்டும். சபாநாயகரை ஏக மனதாகத் தெரிவுசெய்து நீதியாளராக அவரை அனைவரும் கருத வேண்டும் என்பதே அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின்

**நேர்வேயின் தேசியகொடியை எரித்து நேர்வே - அமெ ரிக்காவின் கைக்கூலி. உடனடியாக அது வெளியேற வேண்டும் எனக் கூக்குரலிட்ட ஜே.வி.பியை கூட்டாக வைத்துக்கொண்டு, விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குத் தயாராக வுள்ளோம் என்றும், நேர்வே அதற்கு உதவவேண்டும் என்றுகூறுவதும் விசித்திரமாகவே உள்ளது.**

விருப்பமுமாக முன்னைய காலங்களில் இருந்து வந்துள்ளது. பதின்மூன்றாவது நாடாளுமன்ற அமர்வு முதல் நாள் இப்படி மோசமான நிலைக்கு வந்தமைக்கு - தென்னிலங்கை அரசியலின் சீரின்மையே காரணமாகும்.

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்கதனதும், தனது கட்சியினதும் நலனிற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்கு கங்கணம் கட்டிநின்றார். அந்த மாதிரியான எண்ணம்கொண்ட ஜனாதிபதி தேசத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்ற பெரும் பொய் நிறைந்த விடயமொன்றை முன்வைத்தார். போர் நிறுத்தப்பட்டு, போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினர் கண்காணிப்பிலிருக்க, நிரந்தரத் தீர்வை நோக்கி சமாதான முன்னெடுப்புக்கள் நகர்த்தப்பட்டன. இதன்போது நோர்வே நடுவில் மூன்றாம் தரப்பாக அதுவும் சமாதான ஏற்பாட்டாளராகப்



பணிபுரிந்தது.

இப்படியான சூழ்நிலையில் சிறிலங்காவின் தேசியத்திற்கு ஆபத்து, சிங்களதேசம் ஆபத் தின் விளிம்பில் நிற்கின்றதென்று உண்மைக்கு மாறான கருததுக் களைக் கூறிக்கொண்டு, குறுகிய சிந்தனையுடன் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்தார். தமிழினம் ஏன் போராடி வருகின்றது. அவர்களுக்கு ஏன் விடுதலை தேவைப்படுகின்றது? என்ன நாட்டில் நடக்கின்றதென்பதைத் தெரியாதவரல்ல ஜனாதிபதி. ஆனாலும்... தான் நினைத்ததைச் செய்து முடித்த திருப்தியில் தேர்தலுக்கான அடுத்த வேலைத்திட்டங்களை முடுக்கிவிட்டார். கிழக்கு வவகாரம் புலிகளைப் பலமிக்கச் செயதுள்ளதாக எண்ணியும், ஜாதிக ஹெல உறுமயவின் வருகையைக் கவனத்திற்கொண்டு வித்தியாசமான கணிப்பொன்றினை மேற்கொண்டு, தான் நினைத்ததை முடிக்கலாம் என ஜனாதிபதி கனவு கண்டார். அது கனவாகவே போய் விட்டது.

முதற்கோணல் முற்றிலும் கோணலாகிவிடும் என மூத்தோர்கள் சொல்லுவார்கள். இது ஏராளமான சந்தர்ப்பங்களில் சரியாகவே அமைந்துள்ளது. ஜனாதிபதியின் கூட்டாட்சியும் முதல் நாள் மண் கவ்வியது. இருந்தும் அவரது கூட்டிலுள்ள சிலர் கூறுவதைப் பார்க்கின்றபோது நகைப்பாக இருக்கின்றது. விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போன்ற கருத்து வெளியிடுகையானது, அவர்களின் தேர்தல் வெற்றி - ஆட்சியமைப்பதற்கு முடியாத அல்லது அமைக்கும் ஆட்சி பெரும்பான்மையினை காண்பிக்கமுடியாத ஒரு இக்கட்டான நிலைப்பாட்டினை தோற்றுவித்துள்ள, மறைக்க முயலும் ஒன்றாகவே உள்ளது.


தமிழினத்தை ஒடுக்குவதற்காக சமாதானத்திற்கான போரை நடத்தியவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. இதன் காரணமாகத் தானோ என்னவோ முதலில் இந்த நாட்டில் சமாதானத்தை முன்னெடுத்தவர் எனக் கூறிவருகின்றார். இதற்கு தாளம் போடுகின்றவர்களும் உள்ளனர். இவர் சமாதானத்திற்கான போரை நடத்தியதனால், தெற்கிலிருந்துவரும் சமாதானம் என்ற சொல்லே தமிழரிற்கு அருவருப்பைதான் ஏற்படுத்துகின்றது. இப்படியான நிலைமையில்தான் மீண்டும் சமாதானம் பேசுகின்றார். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினை நிரூபிக்க முடியவில்லை. ஆட்சியே தடுமாறுகின்றது. இந்த நிலையில் நோர்வேயை அழைத்தென்ன? அழையாமல் விட்டென்ன? சமாதானம் என்று மீண்டும் எழுந்துள்ள கதை வெறுமனே போக்குக் காட்டுவதற்காக என்பதைப் பார்ப்போமானால்- மிகவும் முக்கியமான விடயமாக தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்தெரிகின்றது. தமிழர் தாயகப்பிரதேசத்தில் கூட்டமைப்பு பெரும் வெற்றியைப்பெற்றிருக்கின்றது. இதன் ஆதரவில்லாமல் நாடாளுமன்ற ஆட்சி தள்ளாடும்நிலையில், கூட்டமைப்பு தமிழரின் அரசியல் பலமாகியுள்ளது. அந்தப்பலம் இன்னும் கூடுவதற்கே வாய்ப்பு உள்ளது. இதனைப் பார்க்கின்றபோது கூட்ட மைப்பின் ஆதரவில்லாமல் எதுவுமே செய்யமுடியாமல் தென்னிலங்கை அரசியல் ஆரோக்கியம் இழக்கும்நிலையே தென்படுகிறது. இந்த இடத்தில் கேள்விகள் பல எழலாம். அதிலொன்று ஏனையவர்களும் தாம்தான் அரசினை தீர்மானிக்கும் சக்தியென்று கூறி வருவதேயாகும். இதனைச் சரியான முறையில் நோக்கவேண்டும். முஸ்லிம் காங்கிரஸோ, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸோ எதுவானாலும் ஏற்கனவே அரசுடன் ஆதரவாக இருந்து, அமைச்சுப் பதவிகளைக் கட்டிப்பிடித்து வைத்திருப்பதே போதுமென்று எண்ணியிருந்தவர்களேயாவர். ஆகவே இவர்கள் தீர்மானிக்கும் சக்திகளாக அல்லாமல் பிழைப்புவாத அரசியல்வாதிகளாகவே இருந்து வந்துள்ளனர். இதனைப் பார்க்கின்றபோது இந்தமுறை தீர்மானிக்கும் சக்தி தமிழ் தேசியக் கூட்டமைப்பினரே என்பது தெளிவாகின்றது.

இந்தவேளை, தென்னிலங்கை அரசியல்வாதிகள் சமாதானம் என்பதனை மெய்யாக மனரீதியாக நடைமுறைப்படுத்தி தீர்வொன்றை கொண்டுவருவதாய் எதையாவது செய்கின்றார்களா என்றால்... இல்லையென்பதனை உடனடியாகக் கூறமுடியும். இது வரலாறு எமக்கு கற்றுத்தந்த பாடம். தமிழரை சிங்களத் தலை வர்கள் ஏமாற்றுகின்றார்கள். மாறி மாறி வரும் அரசுகள் அர்த்தமில்லாத தர்க்கங்களை முன்வைத்து ஏமாற்றியே வந்துள்ளன. இதனை புரிந்தும் புரியாமலிருந்த அனைத்துலக சமூகத்திற்கு, அண்மைக் காலங்களில் தென்னிலங்கை அரசியலில் தலைமையிலுள்ளோர் எப்படியான போக்குடையவர்கள் என்பதை விடுதலைப் புலிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

சிங்கள மக்கள் குழப்பமானவர்கள். அவர்கள் அரசுகளை அமைக்கும் சக்தியாக அல்லாமல் வாக்களிக்கும்போது குழப்பங்களை ஏற்படுத்துகின்றனர் என்றெல்லாம் சிலர் பொறுப்பற்ற கருத்துக்களை கூறுகின்றனர். உண்மை அதுவல்ல. அண்மைக் காலத்தை நோக்குவோமானால்- 1994 ஆம் ஆண்டு நாட்டில் தீர்வொன்று நிரந்தரமாக வரட்டும் என சிங்கள மக்கள் நிதானமாகவே வாக்களித்தார்கள்.

ஆட்சியை அமைத்தவர்கள் சமாதானம் மூலமாக தீர்வொன்றை கொண்டுவரவில்லை. மக்கள் ஆட்சியை மாற்றிக்கொடுத்தார்கள். அவர்களால் தீர்வொன்றை கொணடுவரமுடியவில்லை. நாடாளுமன்றத்தைக் கலைத்து, அமைச்சுப் பதவிகளைப் பறித்து, ஜே.வி.பியுடன் கூட்டணியாகி சொன்னவார்த்தை - சமாதானம் தொடரும் என்பது மட்டுமேயாகும். பதின் மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலிலும் மக்களை யாரும் குறைகூறமாட்டார்கள். குறைகூறவும்முடியாது. வாக்குகள் சரியானமுறையில்தான் இடப்பட்டுள்ளன.

ஜே.வி.பி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் உதிரிகளின் கூட்டாட்சிக்கு, ஏனையவர்களின் ஆதரவும் அமையுமானால், நிரந்தரத் தீர்வொன்றைக் கொண்டுவர முடியும். ஆனால், பதவிகளை பிடித்தவர்கள் பதவிகளை தக்க வைப்பதற்கு என்ன விலை கொடுப்பதற்கும் தயாராக இருக்கின்றனர். சமாதானம் என்று பேச்சளவில் தமிழரைத் தொடர்ந்தும் ஏமாற்றுவதில்தான் சிங்களத் தலைவர்கள் கரிசனையாகவுள்ளனர். மக்களின் ஆணை என்ன? அவர்களை



இன்னுமொரு தேர்தலில் ஏமாற்றுவதற்கு ஏதாவதொரு விடயம் கிடைக்காமலா போகப்போகின்றது? என்ற எண்ணத்துடன் இன்று சுய நலனிற்காகப் பதவியைக் கட்டிப்பிடித்திருக்க என்ன தந்திரங்களைப் பயன்படுத்தமுடியுமோ அத்தனையையும் பயன்படுத்துகின்றனர்.

நோர்வேயின் தேசியகொடியை எரித்து நோர்வே - அமெரிக்காவின் கைக்கூலி, உடனடியாக அது வெளியேறவேண்டும் எனக் கூக்குரலிட்ட ஜே.வி.பியைக் கூட்டாக வைத்துக் கொண்டு, விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு தயாராகவுள்ளோம் என்றும், நோர்வே அதற்கு உதவ வேண்டும் என்று கேட்பது விசித்

**தென்னிலங்கை அரசியல்வாதிகள் சமாதானம் என்பதனை மெய்யாக மனரீதியாக நடைமுறைப்படுத்தி தீர்வொன்றை கொண்டுவருவதாய் எதையாவது செய்கின்றார்களா என்றால்... இல்லையென்பதனை உடனடியாகக் கூறமுடியும். இது வரலாறு எமக்கு கற்றுத் தந்த பாடம்.**

திரமாகவே உள்ளது. மனத்தெளிவுடன் மெய்யாகவே நிரந்தரத் தீர்வொன்றை சந்திரிகா குமாரதுங்க 1994 ஆம் ஆண்டே கொண்டுவந்திருக்க முடியும். அப்படியான எண்ணம் அன்று அவரிடம் இருந்தாலும் அருகிலிருந்தவர்களும், அந்நிய நாட்டினரும் விடவில்லை. இன்றும் அதேயாட்கள் அருகில் தானுள்ளனர். இன்று மட்டும் பெரிதாகத் தமிழரிற்கு எதனைக் கிண்டிக் கிழறிக் கொடுப்பதற்கு விடப் போகின்றனர்?

ஆகவே, தொடர்ந்தும் ஏமாற்றுவதை அவர்கள் கைவிடவில்லையென்றால், சிங்கள தேசத்தின் பொருளாதாரமும், நிம்மதியான வாழ்வும் - அவர்கள் தமிழரை எவ்வளவு கொடுமைப்படுத்துகின்றனரோ அதனிலும் அதிகமான சீர்கேட்டிற்குள்வரும் என்பது நிஜமேயாகும்.

நிறுத்தப்பட்டிருக்கும்போர் மீண்டும் வரக்கூடாதென்பதே தமிழரின் விருப்பம். ஆனால், மீண்டும் அரசு போரைத் தொடங்கினால் தமிழினம் கைகட்டி, வாய் பொத்தி மௌனிகளாகநிற்க முடியுமா?

அமைச்சுப் பதவியை அரைகுறையாக வைத்திருப்பவர்களும், ஆட்சியமைக்க நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் காட்ட முடியாதவர்களும் - மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை என்ன செய்யப்போகின்றனர்.

காற்றில் பறக்க விடப்போகின்றனரா? ஆகக் குறைந்தது அரச வேலைவாய்ப்பை பல்லாயிரம் பேரிற்கு தருவோம் என்றார்கள் - எப்படிக் கொடுப்பார்கள். சில வேளை மே ஐந்தாம் நாள் படையில் புதியவர்களை இணைப்பதற்கு நேர்முகத்தேர்வுக்கு ஒழுங்கு செய்யப்பட்டதும் அரச உத்தியோகம் தானே என்று சொல்வார்களோ?

கிழக்கில் என்ன நடந்துள்ளது? இது போன்றவைதான் சமாதானத்தைக் கொண்டுவரப்போகின்றதா? பொறுமை எல்லை தாண்டினால்... எப்படி கைகட்டி நிற்பது? அனைத்துலக சமூகமே... இப்படியானவர்கள்மூலம் சமாதானத்தை கனவிலும் நிறைவேற்றமுடியாது என்பது உண்மையாகும். தமிழினம் எப்படியான உறுதியுடன் ஓரணியாக நிற்கின்ற தென்பதற்கு பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலும், அதன் முடிவும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியும் நல்ல உதாரணங்கள்.

பதவிகளை மட்டும் பிடித்து பல்லிளித்தால் போதாது. தமிழரிற்காக உணர்வுடன் ஒன்று திரள்வதே மதிக்கப்படும். இதனைப் புறம்தள்ளி எவராலும் மக்களின் மனதை வென்று இடம்பிடிக்க முடியாது.

பொய்களும், ஏமாற்றுக்களும், பித்தலாட்டங்களும் பிழைப்பு வாத அரசியலும், எப்போதொலைந்து போகின்றதோ அன்று தான் சிங்களதேசம் சமாதானம் என்பதை முழுமனதுடன் முன்வைக்கும். அதுவரையும் தமிழினம் பலமாக இருக்க ஒன்றுபட்ட செயற்பாடு முக்கியமாகும். எமது பலமே மக்களையும், மண்ணையும் விடுதலையாக்கும். ✷

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஓதிஉணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## நோர்வேயின் மீள் வருகையும் சமாதானம் குறித்த மீளாய்வும்

எப்படியோ எவரின் அழுத்தத்தின் காரணமாகவோ, எந்த அவசியத்தின் அடிப்படையிலோ அல்லது எந்த இலக்கினை குறிக்கோளாக வைத்தோ மீண்டும் சமாதான முன்னெடுப்பு ஒன்றை மேற்கொள்ளவேண்டிய தேவை அரசுக்கு அதாவது, புதிதாக தேர்வு பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு - தவிர்க்கவே முடியாத ஒன்றாகிவிட்ட நிலையில் அதற்கான கால்கோள் நடந்தேறியுள்ளது என்றே கூறவேண்டும்.

கடந்தவாரத்தின் ஆரம்பத்தில் திடீரென ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கத் தொடர்ந்து அனுசரணை வழங்குமாறு நோர்வே அரசுக்கு அழைப்பு விடுத்தபோது அதனை அனைவருமே ஆச்சரியத்துடன் அவதானிக்கவும், ஆராயவும் தொடங்கியது நிஜமேயாகும்.

தேர்தலுக்கு முன்னர் மட்டுமல்ல, தேர்தல் பிரசாரக்காலத்திலும் கூட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் அனைவருமே கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசின் சமாதான முயற்சிகளையும், அதற்கு ஏற்பாட்டாளராக செயற்பட்ட நோர்வே அரசையும் மட்டுமல்ல அந்த சமாதான முயற்சிகளுக்கு பெருமளவில் ஆதரவைத் தெரிவித்து சமாதானத்தை தொடர்ந்தும் வலியுறுத்திய சர்வதேச சமூகத்தையும், குறிப்பாக அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளை கடுமையாகச் சாடியும், கண்டித்து விமர்சித்தும், விடுதலைப்புலிகளுக்கு சார்பாக இயங்குகிறார்கள் என அபத்தமாகச் குற்றம் சாட்டியும் வந்ததுடன், எதிர்காலச் சமாதான முயற்சிகளின்போது நோர்வேயை தூக்கியெறிந்து விடுவோம் என்றெல்லாம் பகிரங்கமாக பிரசாரம் செய்துவந்தனர் என்பது நாடறிந்த - உலகறிந்த விடயமேயாகும்.

அதுமட்டுமல்ல எதிர்காலப்பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளை மட்டும் தமிழர்களின் ஏகப்பிரதிநிகளாக தாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும், ஏனைய சகல தமிழ்க் குழுக்களையும் இணைத்தே பேசுவோம் என்றும், அந்தப் பேச்சுவார்த்தைகளின்போது இந்தியாவை பிரதான தரப்பாக இணைத்துக்கொள்வோம் எனவும்கூட "வாய்ச்சவடால" அடித்ததைத் தேர்தல் பிரசாரங்களின் போதும் கேட்கக்கூடியதாக இருந்தது.

இத்தகைய பேச்சுக்களை அடிக்கடி பேசியும், அறிக்கைகளை விடுத்தும் சமாதான விரும்பிகளுக்கு அதிகளவு அச்சத்தை ஏற்படுத்தியவர்கள் லக்ஷ்மன் கதிர்காமரும், ஜே.வி.பியினரும்தான்.

லக்ஷ்மன் கதிர்காமர் என்றால் அவர் ஒரு தனிமனிதரல்ல... ஜனாதிபதியின் ஆலோசகர். எனவே, அவரின் பேச்சுக்கள் யாவும் ஜனாதிபதியின் கருத்து நிலைப்பாட்டை பிரதிபலிப்பதாகவே கருதப்படவேண்டியதாயிற்று.

ஜே.வி.பி யினரோ ஜனாதிபதியின் பிரதான பங்காளிகளாக இருக்கையில் அவர்களின் கருத்துக்களில் அவரின் பங்கும் சரிசமமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே புதிய அரசின் சமாதானம் தொடர்பாக ஏதும் முயற்சிகளையெடுக்க நேரிடின் அது முன்னைய அரசின் அமைதி முயற்சிகளுக்கு முற்றிலும் எதிரானதும், சர்வதேச சமூகத்தாலோ, விடுதலைப்புலிகளாலோ ஏற்றுக்கொள்ள முடியாததுமான ஒன்றாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டவேளையில், நோர்வேக்கான ஜனாதிபதியின் அழைப்பு வியப்பூட்டும் ஒன்றாக மட்டுமல்ல, சந்தேகத்துக்கும் உரிய விடயமாக அமைந்துள்ளது.

நோர்வே - ஜனாதிபதியின் அழைப்பினை ஒரு இராஜரீக நாகரீகத்துடன் ஏற்றுக்கொண்டதுடன், ஜனாதிபதியினதும், அவரதும் தோழர்களினதும் கடந்தகால அவமதிப்புக்களை மறந்து, சமாதான முயற்சிகளில் மீண்டும் தனது பணியைத் தொடங்கியுள்ளது இந்த அழைப்பு நோர்வேக்கு கிடைத்த அங்கீகாரமும், வெற்றியுமாகும்.

இதேவேளை, இந்தியாவுக்கு சமாதான முயற்சிகள் பற்றி எடுத்துரைக்கச் சென்ற ஜனாதிபதியின் ஆலோசகரும், புதிய வெளியுறவு அமைச்சரும், அரசின் பிரதம புலிகள் எதிர்ப்புப் பிரசாரருமான லக்ஷ்மன் கதிர்காமர் விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்று பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் என்றும், இதில் இந்தியாவின் பங்கு குறித்து விடுதலைப் புலிகளின் கருத்தினை அறிந்தே தீர்மானிக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

இது விடுதலைப் புலிகளுக்கு கிடைத்த பெருவெற்றியாகும்.

நோர்வேயையும், விடுதலைப்புலிகளையும் ஜனாதிபதி இப்போது அங்கீகரித்ததும் அவர்களுடன் நல்லுறவைப் பேண விரும்புவதும் அவரது மனப்பூர்வமான விருப்புடன் மேற்கொள்ளப்படும் விடயங்கள் எனின், கடந்த அரசின் பேச்சுவார்த்தைக்களைக் குழப்பி விமர்சித்து ஒத்துழைப்பு வழங்காது இடையூறுகளைச் செய்ததுடன், அந்த ஆட்சியையும் கலைத்தது ஏன் என்ற கேள்வி எழவே செய்கிறது.

இதற்கான விடைகுறித்து ஆராயப்போனால், மேலும் பல சந்தேகங்களும், கேள்விகளும் எழுவதும் தவிர்க்கமுடியாததாகிவிடும்.

ஆனால் ஒன்றை மட்டும் கூறலாம். அதாவது அரசியல் ஆயவாளர்களும், அவதானிகளும் கூறுவது போன்று பலவீனமான ஒரு அரசு நெருக்கடிகளையும், அழுத்தங்களையும் தேசிய மற்றும் சர்வதேசிய மட்டத்தில் எதிர்கொள்ளவேண்டிய நிலையில் இந்த நிலைப்பாட்டிற்கு வரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிவிட்டுள்ளது.

நிர்ப்பந்த நிலைப்பாடு சமாதான உடன்பாட்டுக்கு வழிவகுக்குமா? நோர்வேயும், சர்வதேச சமூகமும் ஆழமாக யோசித்து செயற்படவேண்டிய காலகட்டம் இதுவேயாகும்.

## நாடும் நடப்பும்




# 113 ஆசனங்கள் கொண்டதாக அரசு பெரும்பான்மை பலம் பெறும்!

### அனுரா பண்டார நாயக்க நம்பிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் 113 ஆசனங்களை விரைவில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பெறும் என்று சுற்றுலாத் தொழிற்துறை மற்றும் முதலீட்டுத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவின்றி 113 ஆசனங்களைப் பெறுவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சில அரசியல் கட்சிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போதைய தேர்தல் முறையின் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 106 ஆசனங்கள் கிடைத்த போதும் இந்த சிறுபான்மைப்பலம் நாடாளுமன்றத்தில் பிரதிபலிக்காது.

நாடாளுமன்றத்தில் 113 ஆசனங்கள் பெரும்பான்மைப் பலம் பெற்றதும் - மக்களுடன் நட்புறவுடன் செயற்படக்கூடிய வலுவுள்ள ஆட்சி இங்கு ஸ்தாபிக்கப்படும் என்று அனுரா பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்தார்.

# சமாதானப் பேச்சை முன்னெடுத்து யுத்தத்துக்கு முடிவுகாணவேண்டும்!

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கம் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே அதன் உண்மைத்தன்மைக்கு எடுத்துக் காட்டாக அமையுமென - எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மே தினத்தை முன்னிட்டு அவர் நாட்டுமக்களுக்கு நேற்று முன்தினம் விடுத்த செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தனது செய்தியில் தெரிவித்திருப்பதாவது -

கடந்த இரண்டு ஆண்டுகளில் எமது கட்சி ஆட்சியில் இருந்தபோது சிறந்த அடித்தளத்தினை இட்டுக்கொடுத்துள்ளமையால், புதிய அரசாங்கத்துக்கு ஆட்சியைக் கொண்டு நடத்துவதில் பாரிய சிரமங்கள் இருக்கமாட்டாது என எதிர்பார்க்கிறேன்.

இந்த நிலையில் நடந்து முடிந்த தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் அக்கறையுடன் செயற்படவேண்டும்.

மக்கள் மத்தியிலுள்ள பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளையும் நீக்குவதில் அரசு நிதானத்துடன் செயற்படவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து, நீண்டகால யுத்தத்திற்கு சரியான தீர்வினைக் காண முயலவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கந்தப்பொல வன்முறை; விசாரணை சி.ஐ.டியிடம்!

நுவரெலியா - கந்தப்பொலவில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைககளம் பொறுப்பேற்றுள்ளது.

இந்த வன்முறைச்சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்தே, இந்த விசாரணையை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

கந்தப்பொல வன்முறைச் சம்பவங்களில் குற்றவாளிகளாக இனம்காணப்படுவோரை நீதியின் முன்நிறுத்தி, தண்டனை வழங்க வேண்டும் எனவும், பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பணிப்புரை விடுத்தார்.

# தென்மாகாண சபை 5 ஆம் திகதி கலைப்பு!

(கொழும்பு)

தென்மாகாண சபை எதிர்வரும் 5 ஆம் திகதி கலைககப்பட்டவுள்ளது. இதற்கான தீர்மானம், தென்மாகாணசபை முதலமைச்சர் எச்.ஜி.சிறிசேனவின் தலைமையில் இடம்பெற்ற மாகாண அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

தென்மாகாணசபை ஆளுநர் கிங்ஸ்லி ரி.விக்கிரமரட்ன இந்தத் தீர்மானத்தை சிபாரிசு செய்துள்ளார். எதிர்வரும் ஜூன் 8 ஆம் திகதியுடன் தென்மாகாணசபையின் ஆயுட்காலம் முடிவடையவுள்ளது.

இதேவேளை கலைக்கப்படும் அனைத்து மாகாணசபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தல்களை நடத்த முடிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# மரியாயின்சேனை ஊழியர்கள் மன்னாருக்கு விஜயம்!

(கொழும்பு)

தமிழ் நாட்டைச் சேர்ந்த மரியாயின்சேனை ஊழியர்கள் ஒன்பது பேர் கடந்த வெள்ளிக்கிழமை மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் காலை கொழும்புக்கு வந்து அங்கிருந்து மன்னாருக்குச் சென்றனர். இவர்கள் மன்னாரின் பேசாலை, மடு, வங்காலை, முருங்கன், அரிப்பு, நானாட்டான் முதலான பலபகுதிகளுக்கும் சென்று சமயசேவை, போதனை முதலான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இவர்கள் மன்னாருக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு அங்கிருந்து யாழ்ப்பாணம், வன்னி, வவுனியா, கொழும்பு முதலான பகுதிகளுக்கும் தமது பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்கள் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மூன்று மாதங்கள் வரையில் இலங்கையில் தங்கியிருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (201)

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004 ஏப்ரல்

## அளவையியலும் விஞ்ஞான முறையும் மாதிரி வினாத்தாள்

பகுதி I, II, III ஆகியவற்றிலிருந்து குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிந்தெடுத்து எல்லாமாக 5 வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

*(நேற்றைய தொடர்ச்சி)*

3. அ) உய்த்தறிவும் தொகுத்தறிவும் ஒன்றுக் கொன்று எதிரானவை அல்ல என்பதை விமர்சனரீதியாக ஆராய்க?
   ஆ) விஞ்ஞானத்தில் விதி உய்த்தறிமுறை விளக்கம் என்பதன் கருத்து யாது?
   இ) விஞ்ஞானத்தில்
      1. புள்ளிவிபரம்
      2. பிரபஞ்சமீ ஆகியவற்றின் பொதுமையாக்கங்களை உதாரணம்மூலம் காட்டுக?
   ஈ) விஞ்ஞானத்திற்கு வில்கெம்வூண்ட் என்பவரின் பங்களிப்பு என்ன?

4. பின்வருவனவற்றில் ஐந்திற்கு சிறுகுறிப்பு தருக?
   1. விஞ்ஞானமும் மில்லின் விதியும்
   2. காரண காரிய விளக்கம்
   3. இயற்கை ஓர் சீர்மை விதி
   4. அளவுத்திட்டவகைகள்
   5. பகுப்பாய்வும் விஞ்ஞானமும்
   6. விஞ்ஞானமும் உளப்பாங்கும்

### பகுதி II

5. அ,
   1. நிகழ்தகவின் சார்பின்மை என்பதன் கருத்து என்ன?
   2. இருதாயக்கட்டைகள் ஒரே நேரத்தில் உருட்டப்படுகிறது. மொத்தம் 12 புள்ளி வருதல் சாராமையானதா விளக்குக?
   3. இரு நாணயம் ஒரு முறை உருட்டப்படுகிறது எத்தனை வடிவங்களில் இதற்கான மாதிரி வெளிகளைப் பெறலாம் எனக்காட்டுக?
   4. ஒரு கூடையில் 12 சிவப்பு மாபிள்களும் 8 கறுப்பு மாபிள்களும் காணப்பட்டன இவற்றுள் இரண்டு மாபிள்கள் தொடர்ச்சியாக எடுக்கப்படுகின்றன இவை சாராமையானதா விளக்குக?

   ஆ, பின்வருவனவற்றை விளக்குக.
   1. நிச்சயநிகழ்வு
   2. தற்செயல் நிகழ்வு
   3. மீடிறன் நிகழ்வு

   இ, நிகழ்தகவின் பாரம்பரிய விளக்கம் யாது கூறுகிறது?
   ஈ, நிகழ்வின் நிபந்தனை என்பது யாது?

6. பின்வருவனவற்றை விளக்குக?
   1. சமூக தோற்றப்பாடும் எதிர்வுகூறலும்
   2. மானிடவியலும் விஞ்ஞானமும்
   3. தொல்பொருளியலும் பௌதீக விஞ்ஞானமும்

7. அ, தேர்தல் காலங்களில் கருத்துச்செல்வாக்கைப் பெறும்போது ஓர் குடியில் இருந்து மாதிரி களைத் தெரிவுசெய்யும்போது எவ்வாறு அமையவேண்டும்
   ஆ, வகைமாதிரிகளில் ஏற்படும் தவறுகள் என்ன எனக் காட்டுக?
   இ, மூடிய வினாக்கொத்து திறந்த வினாக்கொத்து ஆகியவற்றை வேறுபடுத்துக?
   ஈ, பின்வருவன சரியானவையா பிழையானவையா எனக்கூறி காரணம் தருக?
   1. விவேக்கின் நுண்மதி 100% வடிவேலின் நுண்மதி 80% ஆக்வே இருவரும் சேர்ந்தால் ஓர் மேதை ஆகலாம்.
   2. பில்லாவுக்கு அவனது தகப்பனார் ஓர் இனிப்புப் பொதியை கொடுத்தார் அதில் பெரும்பாலான இனிப்பு சிவப்பு ஆகும் அவன் தொடர்ச்சியாக எடுத்த 6 இனிப்பு சிகப்பு எனின் 7 ஆவது இனிப்பு சிகப்பாகும்.
   3. ஒரு கிழமை அவன் 14 வாழைப்பழம் தின்றுள்ளான் அகவே ஒரு நாளைக்கு 2 வாழைப்பழம் தின்றான்.
   4. ஒரு நாட்டின் பணவீக்கம் 8.5% எனவே நாட்டில் பொருளாதார விருத்தி நிகழவில்லை.

8. அ, பின்வருவனவற்றை வேறுபடுத்துக.
   1. வீச்சும் பரப்பீடும்
   2. நியமவிலகலும் சராசரிவிலகலும்

   ஆ, புள்ளிவிபரவியலை எவ்வாறு தவறாக பயன்படுத்தலாம் என விளக்குக?
   இ,
   1. எழுத்துமூலமாக
   2. அறிக்கைமூலமாக
   ஆய்வுமுறைகளை விளக்குக?
   * ஈ, சமூக விஞ்ஞானமும் புள்ளிவிபரமும் பற்றி விளக்கு?

### பகுதி III

9. அ, சிக்மன் புரொய்ட் தனது பகுப்பு வாதத்தில் வெளிப்படுத்திய நனவும், மறை நனவும் பற்றி விளக்கு?

   ஆ, பின்வருவோரில் இருவர் உளவியலுக்கு ஆற்றிய பங்களிப்பை தருக?
   1. பவ்லோ
   2. ஏப்ரகாம் மாஸ்லோ
   3. வேதிமர்
   4. கொவ்கா

   இ, பின்வருவன பற்றி விளக்குக?
   1. சொட்டு பொறியியல் தத்துவம்
   2. ஒட்சிசன் கண்டறியப்பட்டதும் புளோசித்தோ நிராகரிப்பும்
   3. வாயு மூலக்கூற்று தொடர்பான அவகாதரோ விதி

10. அ. பின்வருவோரில் ஒருவர் விஞ்ஞானத்திற்கு ஆற்றிய பங்களிப்பு
   1. ஜேம்ஸ்வாட்
   2. இரதபோட்
   3. J.J.தொம்சன்

   ஆ. பின்வருவன இரண்டைப்பற்றி விளக்குக?
   1. மகாவெடிப்புக் கொள்கை
   2. D.N.A, R.N.A
   3. பென்சிலின் மருந்து கண்டுபிடிப்பு

   இ. J.C.போஸ் தாவரவியலுக்கு ஆற்றிய பங்களிப்பை வெளிப்படுத்துக?

   ஈ. J.M.கெயின்சின் பொருளியல் விளக்கமானது யாது கூறுகிறது?

11. பின்வருவன நான்கிற்கு குறிப்பு தருக?
   1. உரிமைகளும் கடமைகளும்
   2. சுயாதீன சித்தம்
   3. ஒழுக்கவியலும் சட்டமும்
   4. விஞ்ஞானமும் அழகியலும்
   5. ஒழுக்கவியல் போலிகள்

12. பின்வருவனவற்றில் இரண்டு பற்றி கட்டுரை வரைக?
   1. நீர் மாசடைதலும் சுகாதார பிரச்சினையும்
   2. மனிதப் பெறுமானங்களும் தற்கால மருத்துவ விஞ்ஞானமும்
   3. வரையறுக்கப்பட்ட மூலவளமும் சனத்தொகை அதிகரிப்பும்.

P.கமல் ஆசிரியர் யாழ். இந்துமகளிர் கல்லூரி

## மாதிரி வினாத்தாள் இரசாயனவியல்

### பகுதி - 1

1. P ற்கு அதிக ஒத்த இரசாயன இயல்புகளைக் கொண்டிருக்கும் மூலகம்
   1) Cl 2) B 3) Al 4) As 5) N

2. ஆவர்த்தன அட்டவணையில் தாண்டல் மூலக உறுப்பினராக அமையாத மூலகம்
   1) Cu 2) Sc 3) Mn 4) Cr 5) Ni

3. வெப்பநிலை 300K இலும் 1 atm அமுக்கத்தின் கீழும் $N_2$ இன் அடர்த்திக்கு அதிக கிட்டவாக வுள்ள அடர்த்தியை கொண்டிருக்கக்கூடிய வாயு அல்லாதது எது?
   ( C = 12, H = 1, N = 14, D = 2, B = 11, O = 16 )
   1) $C_2H_4$ 2) $C_2D_2$ 3) $B_2H_6$ 4) CO 5) $C_2H_6$

4. பின்வருவனவற்றில் எது ஒரு வெப்பமிறுக்கும் பல் பகுதியம் ஆகும்?
   1) பொலிஸ்ரைறீன் 2) போலி புறப்பிலீன் 3) பொலியெஸ்ரர்
   4) பீனோல் - போமல்டிகைட் 5) செயற்கை றப்பர்

5. வாயு நிலையில் ஈரணு மூலக்கூறாக காணப்படும் சாத்தியம் உள்ள மூலகம்
   1) He 2) Cd 3) Mg 4) Li 5) Kr

6. $ns^2, np^1$ என்ற முறையில் வெளி இலத்திரன்களின் நிலையமைப்பைக் கொண்டுள்ள மூலகம் ஒன்றின் வலுவளவுகள் ஆக பெரும்பாலும் இருக்கக்கூடியது
   1) 2, 3 2) 1, 3 3) 1, 2 4) 3, 5 5) 2, 4

7. C, H, D ( D = ஐதரசன் சமதானி) ஆகியவற்றை மட்டும் கொண்டுள்ள சேதனச்சேர்வை யொன்று திணிவு ரீதியில் 12% ஐதரசனை ( H ) வைத்திருக்கின்றது. அதன் சார் மூலக்கூற்று திணிவு 100 ஆகும். இச்சேதனச் சேர்வையின் மூலக்கூறு ஒன்றில் எத்தனை D அணுக்கள் இருக்கின்றன.
   சார் அணுத்திணிவுகள் ( C =12, H = 1, D = 2 )
   1) 1 2) 2 3) 3 4) 4 5) தரவு போதாது

8. $CCl_4$ இலுள்ள C - Cl பிணைப்பின் நியமப்பிணைப்பின் பிரிகைச் சக்தியின் சராசரியை காண்பதற்கு தேவையற்ற தரவு எது?
   1) C இன் நியம பதங்கமாதல் சக்தி
   2) Cl - Cl இன் நியமப்பிணைப்பு சக்தி
   3) $CCl_4$ இன் நியம தகன வெப்பவுள்ளுறை
   4) $CCl_4$ இன் நியம தோன்றல் வெப்பவுள்ளுறை
   5) $CCl_4$ இன் ஆவியாதல் வெப்பவுள்ளுறை

9. திணிவு ரீதியில் 36% $H_2O$ உடைய மெதனோல் நீர் கரைசல் ஒன்றில் O அணுக்களின் மூல் பின்னம் ( C = 12, H =1, O = 16 )
   1) $1/2$ 2) $1/3$ 3) $2/7$ 4) $2/9$ 5) $2/5$

10. $CaCO_{3(s)} + 2HCl_{(aq)} \longrightarrow CaCl_{2(aq)} + CO_2\uparrow$ என்ற சமன்பாட்டுக்கமைய 1520 mmHg அமுக்கத்திலும் $273^0C$ இலும் 22.4 $l$ $CO_2$ I தந்தது ஆயின் தாக்கமடைந்த $CaCO_3$ இன் திணிவு யாது? {Ca=40, C=12, O=16, Cl=35.5}
   1) 100g 2) 50g 3) 200g 4) 25g 5) 400g

11. 0.050 $moldm^{-3}$ NaOH கரைசலொன்றின் 100.0 $cm^3$ உம் 0.025 $moldm^{-3}$ $H_2SO_4$ கரைசலொன்றின் 100.0 $cm^3$ உம் சேர்க்கப்பட்டு கலவையின் மொத்தக்கனவளவு 250.0$cm^3$ இற்கு வடிநீருடன் வரச்செய்யப்பட்டது. பெறப்பட்ட கரைசலில் $(OH)^-$ அயன் செறிவு
   1) 0.200 mol $dm^{-3}$ ஆகும் 2) 0.333 mol $dm^{-3}$ ஆகும்
   3) $10^{-7}$ mol $dm^{-3}$ ஆகும் 4) 0.00mol $dm^{-3}$ ஆகும் 5) கூறமுடியாது

12. HCl கரைசலொன்று 1.15$gcm^{-3}$ அடர்த்தியும் 11.5 $moldm^{-3}$ செறிவும் உடையது. இக்கரைசலில் HCl இன் திணிவுப்படியான சதவீதம் யாது?
   1) 36.5% 2) 11.5% 3) 18.25% 4) 8.69% 5) 35.5%

13. பின்வரும் நீர்க்கரைசல்களுள் எது அதியுயர் $P^H$ பெறுமானம் கொண்டுள்ளது?
   1) 0.001 mol $dm^{-3}$ $CH_3COOH$ 2) 0.001 mol $dm^{-3}$ HCOOH
   3) 0.001 mol $dm^{-3}$ $NH_{3(aq)}$ 4) 0.001 mol $dm^{-3}$ $CH_3NH_{2(aq)}$ 5) தூய நீர்

14. 2A + B $\longrightarrow$ 2D எனும் தாக்கத்தில் A தொடர்பான தாக்க வரிசை 2. B தொடர்பான தாக்க வரிசை 0. இத்தாக்கம் சம்பந்தமான பின்வரும் எது சரியானது. A இன் செறிவு வீழ்ச்சி வீதம் R ஆயின்
   1) B ன் செறிவு வீழ்ச்சி வீதம் R
   2) B இன் செறிவு வீழ்ச்சி வீதம் $^R/_2$
   3) B இன் செறிவு நேரத்துடன் மாறாது
   4) D இன் செறிவு அதிகரிப்பு வீதம் 2R
   5) மேலுள்ள எல்லாம் பிழை

15. 0.1 $moldm^{-3}$ $CH_3COO^-Na^+$ கரைசலின் 100$cm^3$ உடன் 0.1 $moldm^{-3}$ $CH_3COOH$ கரைசலின் 100$cm^{-3}$ ஐக் கலப்பதன் மூலம் கரைசல் ஒன்று தயாரிக்கப்பட்டது. இக்கரைசலுக்கு நீரின் மேலும் ஒரு 10$cm^3$ I இடுவதன் விளைவு
   1) கரைசலின் $P^H$ ஐ கணிசமாக குறைக்கும்
   2) கரைசலின் $P^H$ ஐ கணிசமாக அதிகரிக்கச் செய்யும்
   3) கரைசலின் $P^H$ ஐ 7 இல் மாறாமல் வைத்திருக்கும்
   4) $P^H$ ஐ ஏறத்தாழ மாறாமல் வைத்துக்கொண்டு கரைசலின் செறிவைக் குறைக்கும்
   5) கரைசலின் செறிவை அல்லது $P^H$ ஐப் பாதிக்காது

16. 0.1 mol $dm^{-3}$ NaOH இன் 1 $cm^3$ ஐ இடும் போது பின்வருவனவற்றில் எந்த ஒரு கரைசல் $P^H$ இல் அதிக மாற்றத்தை காட்டும்?
   1) 0.1mol $dm^{-3}$ HCl இன் 24$cm^3$
   2) 0.1mol $dm^{-3}$ NaOH இன் 24$cm^3$
   3) தூய நீரின் 24$cm^3$
   4) 0.05 mol $dm^{-3}$ $CH_3COO^-Na^+$ + 0.05 mol $dm^{-3}$ $CH_3COOH$ இரண்டு கலவையும் அடங்கிய கரைசலின் 24$cm^3$
   5) 0.1mol $dm^{-3}$ $CH_3COOH$ இன் 24$cm^3$

17. கைத்தொழில் ரீதியில் அப்பற்றைற்ரை குறுகிய காலப்பயிர்களுக்கு பயன்படுத்தக்கூடியதாக மாற்றுவதற்கு இலங்கையை பொறுத்தவரை பயன்படும் பதார்த்தம்
   1) HCl 2) $HNO_3$ 3) $H_2SO_4$ 4) $Mg_2SiO_4$ 5) $H_3PO_4$

18. இலங்கையின் கிழக்கு கரையோரம் புல்மோட்டை எனும் இடத்திலுள்ள இல்மனைட் எனும் கனிப்பொருளில் பின்வரும் எம்மூலகம் கூடியளவில் காணப்படும்?
   1) Ca 2) Na 3) Th 4) Fe 5) Zr

19. பின்வரும் மூலகங்களில் எது அதியுயர் இரண்டாம் அயனாக்க சக்தியைக் கொண்டது?
   1) Mg 2) Al 3) Si 4) P 5) S

20. நீரில் சல்பேற் அயன்களை கண்டு பிடிப்பதற்கு மிகச் சிறந்த முறை
   1) $BaCl_2$ கரைசல் இடுவது
   2) $BaCl_2$ கரைசலும் ஐதான HCl கரைசலும் இடுவது
   3) $Ba(NO_3)_2$ கரைசலும் ஐதான $H_2SO_4$ கரைசலும் இடுவது
   4) $Ba(NO_3)_2$ கரைசலும் ஐதான $HNO_3$ கரைசலும் இடுவது
   5) $Ba(NO_3)_2$ கரைசலும் ஐதான HCl கரைசலும் இடுவது

(தொடரும்...)

K.சிவத்திரன் B.sc (Hons) ஆசிரியர் யாழ்.இந்துமகளிர் கல்லூரி

## உலக நோக்கு

### முதலாளித்துவத்தை எதிர்த்து

# ஆர்ப்பாட்டம் செய்தவர்களை ஐரிஷ் பொலிஸார் விரட்டினர்!



(போனிக்ஸ் பார்க்)

முதலாளித்துவத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த நூற்றுக்கும் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்களை ஐரிஸ் பொலிஸார் விரட்டியடித்தனர். இந்தச் சம்பவம் கிழக்கு ஐரோப்பாவில் நேற்று முன்தினம் நடந்த மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போனிக்ஸ் பார்க்கில் நடைபெற்ற கிழக்கு ஐரோப்பாவின் உச்சி மாநாட்டினை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் மீது தண்ணீரைப் பாய்ச்சி ஐரிஸ் பொலிஸார் கலைத்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேநேரத்தில், மாநாட்டுக்குச் சமுகமளித்த அதிகாரிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில், 28 பொதுமக்கள் கைது செய்யப்பட்டதாக ஐரிஸ் பொலிஸார் அறிவித்தனர்.


மகாநாட்டின் கடைசி நாளன்று இந்தக் கலவரம் இடம்பெற்றதாகவும் அதில் ஒரு பெண் பொலிஸார் காயமுற்றதாகவும் மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கறுப்பு, சிவப்புக்கொடிகளை வைத்திருந்தனர். ஐரோப்பிய தலைநகருக்கு 'எல்லை வேண்டாம், தேசம் வேண் டாம்' என்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை வைத்திருந்தார்கள்.

அநேகமான ஆர்ப்பாட்டக்காரர்கள் -இளைஞர்கள், மாணவர் வயதை ஒத்தவர்கள் அத்தோடு, அவர்கள் முகமூடிகளை அணிந்திருந்தனர்.

அமைதியான ஊர்வலம் திடீரென்று பார்க்கின் வாசலில் கடுமையானதாக, செய்திகள் தெரிவிக்கின்றன. பல நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரை எதிர்த்தனர்.

அமைதியை நிலைநாட்டப் பொலிஸார் வட அயர்லாந்தின் பொலிஸாரிடமிருந்து நீர்த்துப்பாக்கிகளைப் பெற்று, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நீரைப் பாய்ச்சி அவர்களைக் கலைத்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.



கலகம் நடைபெற்றவேளை, கிழக்கு ஐரோப்பியத் தலைவர்கள் இராப்போசனம் அருந்திக்கொண்டிருந்ததாகவும், அவர்களுக்கு ஆர்ப்பாட்டத்தின் சத்தமோ, நடவடிக்கைகளோ தெரியவில்லையெனவும் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# போலந்து பிரதமர் மாற்றப்படவுள்ளார்!



போலந்து பிரதமர் மில்லர் கிழக்கு ஐரோப்பாவின் உச்சிமாநாட்டுக்கு தலைமைதாங்கி நாடு திரும்பினார். கிழக்கு ஐரோப்பாவை ஒரு புதிய விரிவான கிழக்கு ஐரோப்பாவாக மாற்றியமை மில்லரைச்சாரும்.

மில்லர் வெகுவிரைவில் தனது தலைமைப் பதவியிலிருந்து மாற்றப்படவுள்ளார். முன்னைய நிதியமைச்சர் மார்கி பெல்கா இந்த வருடம் அல்லது அடுத்த வருடம் தேர்தல் வரும் வரை காபந்து அரசின் தலைவராக நியமிக்கப்படுவார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மில்லரின் அரசாங்கம் பொருளாதாரப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளது. அத்துடன், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு ஆளும் கட்சியில் பிளவினை ஏற்படுத்தியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.


அபிப்பிராய வாக்கெடுப்பின்படி மில்லரின் கூட்டுக்கட்சி நான்கு வீதம் பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுள்ளது.

கடந்த 15 வருடத்திற்குள் இது எட்டாவது அமைச்சரவையாகும். 15 வருடங்களுக்கு முன் போலந்து கம்யுனிஷ ஆட்சியில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் நாடாளுமன்றத்தின் விசாரணையின்படி, மில்லர் பல கோடிக்கணக்கான அமெரிக்க டொலர்களை லஞ்சம் வாங்கினார் எனவும் கூறப்பட்டிருந்தது.

மத்திய - வலதுசாரி எதிர்க்கட்சி, மில்லரின் ஐக்கிய - இடதுசாரிக் கட்சியை எதிர்வரும் தேர்தலில் வெற்றிகொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது.

போலந்து வங்கிகளும், வியாபார ஸ்தாபனங்களும் முன்னைய நிதியமைச்சர் பெல்காவை நம்புகின்றன. அவர் சிறந்த பொருளாதாரவாதி என்பது குறிப்பிடத்தக்கது.



பெல்கா

இவர் நல்ல தலைவராக இருப்பாரென்றும், போலந்து அமெரிக்காவுடனும், ஐரோப்பாவுடனும் உறவை வைக்க இவர் உதவுவார் எனவும் நம்பப்படுகிறது. போலந்து நாடாளுமன்றம் பெல்காவை பிரதமராக நியமிப்பதா என ஆராயவுள்ளது. இன்னும் இரு வாரங்களில் இது தொடர்பான முடிவு தெரியவரும். மேலும் பொதுத்தேர்தல் வரை இவரைத் தற்காலிகமாக ஆட்சியை நடத்தவிடுவதா எனவும் ஆராயப்படவுள்ளது.

# வெளிநாட்டு பொறியியலாளர் ஐவர் சவுதியில் நடந்த தாக்குதலில் பலி!

சவுதி அரேபியாவின் துறைமுக நகரான யன்புவில் ஐந்து பொறியியலாளர்கள் துப்பாக்கி தாங்கிய பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டனர். சவூதி அரேபியா மேற்படி கொலையை கண்டித்ததுடன், பயங்கரவாதிகளின் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளது.

முடிக்குரிய இளவரசர் அப்துல்லா தெரிவிக்கையில், பயங்கரவாதத்தை எவ்வளவு காலம் எடுத்தாலும் ஒழிப்போம் எனக் குறிப்பிட்டார். துப்பாக்கிதாரிகளின் தாக்குதலில் ஒரு சவூதி படை வீரர் உட்பட இரு அமெரிக்கர்கள், இரு பிரிட்டிஷ்காரர், ஒரு அவுஸ்ரேலியர் என ஆறு பேர் பலியாகினர்.

பாதுகாப்புப்படை தப்பியோடிய நான்கு பயங்கரவாதிகளையும் சுட்டுக் கொன்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எக்சொன் - மொபைல் என்ற பெற்றோலியம் இரசாயன உற்பத்தி நிலையத்துக்கு வெளியே இச்சம்பவம் நடந்ததாக அறியப்படுகின்றது. மேற்படி நிலையம் அமெரிக்காவின் பங்கு நிலையம் என்பது குறிப்பிடத்தக்கது.

3 துப்பாக்கிதாரிகளும் மேற்படி நிலையத்தில் வேலைசெய்பவர்களாவர். அனுமதி சீட்டை உபயோகித்து நான்காம் துப்பாக்கிதாரி இங்கு திருட்டுத்தனமாக நுழைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அல் - கொய்டா இயக்கமே இந்த கொலைக்கு காரணமாக இருக்கலாம் என அவுஸ்ரேலியா தெரிவித்தது.

### ஈ-ராக் தொடர்பாக

# டெய்லி மிரர் வெளியிட்ட படம் நம்பகத்தன்மையற்றதாம்!

## பி.பி.ஸி செய்தியாளர் தெரிவிப்பு

(பாக்தாத்)

ஈராக்கின் கைதிகள் பிரித்தானியப் படையினரால் துன்புறுத்தப்படும் படங்களை பிரித்தானிய பத்திரிகையான டெய்லி மிரர் அண்மையில் பிரசுரித்திருந்தது.

கைதியொருவரை துன்புறுத்திய பின்னர், லொறி ஒன்றிலிருந்து தூக்கி வீசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை - இந்தப் படங்களின் நம்பகத்தன்மை தொடர்பாக பி.பி.ஸியின் செய்தியாளர் போல் அடம்ஸ் கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரித்தானியாவின் லாங்கன்சியர் படைப்பிரிவு இந்தப் படங்களை உண்மைக்குப் புறம்பானவை எனக்கருத்துத் தெரிவித்துள்ளது.

படத்தில் காணப்படும் எஸ்.ஏ 80 எம் கே 1 ரகத் துப்பாக்கிகள் ஈராக்கில் கடமைபுரியும் பிரித்தானியப் படைக்கு வழங்கப்பட இல்லையெனவும், போர் வீரர்கள் அணிந்திருக்கும் தொப்பிகள் ஈராக்கில் போர் வீரர்கள் அணிவதில்லையெனவும் தெரிவித்தார்.

அத்துடன், படத்தில் காணப்படும் பெட்போட் வண்டிகள் வித்தியாசமான வடிவமைப்பைக் கொண்டுள்ளன எனவும் கருத்து வெளியிட்டுள்ளார்.







இந்தப் படங்கள் தமக்கு எவ்வாறு கிடைத்தன என்பதை டெய்லி மிரர் தெரிவிக்கும்போது - லாங்கன்சியர் படைப்பிரிவினரான ஈராக்கில் பணிபுரியும் போர் வீரர் ஒருவரே வழங்கியிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தது.

இதனிடையே இராணுவப் படைக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் அடாம் இன்கிராம் பிரித்தானியப் படையினரிடையே இவ்வாறான செயற்பாடுகள் காணப்படுவதில்லை எனவும், ஐந்து வெவ்வேறு விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்தார்.


### காஸாவிலிருந்து யூதக்குடியிருப்புக்களை அகற்ற

# இஸ்ரேலிய ஆளும் கட்சிக்குள் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது

இஸ்ரேலின் காஸா பிரதேசத்திலிருந்து 7500 யூதக் குடியிருப்பாளர்களும் படையினரும் வெளியேற்றப்படவுள்ளனர். இதற்கான வாக்கெடுப்பொன்றினை ஆளும் லிகுட் கட்சி ஆரம்பித்துள்ளது. இந்தத்திட்டத்தினை இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் ஒருதலைப்பட்சமாக எடுத்துரைத்துள்ளார்

193000 வரையான லிகுட் கட்சியின் அங்கத்தவர்கள் மத்தியில் இதற்குப் பலமான எதிர்ப்பு உருவாகியுள்ளது. ஆனால், எவ்வாறான விளைவுகள் ஏற்பட்டாலும் ஷரோன் வெற்றியடைவாரென அவரது ஆலோசகர் தெரிவித்தார்.

அத்துடன், அமெரிக்க அதிபர் புஷ்சிற்கும் மற்ற உலகத் தலைவர்களுக்கும் அளித்த வாக்குறுதிகளை ஷரோன் காப்பாற்றிக்கொள்வார் எனவும் அவரது ஆலோசகர் தெரிவித்துள்ளார். பலஸ்தீனர்களுடன் மேற்கொண்டிருந்த சமாதானத்திட்டத்தில் யூதக் குடியிருப்புக்கள் வெளியேற்றப்படுதல் ஒரு அங்கமாக அமைந்ததெனவும், மேலும் இந்தத் திட்டத்தில் மேற்குக் கரைப்பிரதேசம் ஜெருசலத்தின் கிழக்குப்பகுதி ஆகியவற்றிலிருந்து 40 இலட்சம் பேர் வரை வெளியேற்றப்பட்டார்கள்



எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சனிக்கிழமை இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் வானொலி உரையாடலில் லிகுட் கட்சி அங்கத்தவர்களை ஆதரவாக வாக்களிக்குமாறு கேட்டிருந்தார். அத்துடன், இந்தத் திட்டம் இஸ்ரேலிய மக்களுக்கு நன்மை தரக்கூடியது எனவும் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மக்கள் கணிப்பில் 80 வீதமானவர்கள் யூதக்குடியிருப்புக்களை வெளியேற்றுவதற்கு ஆதரவு தெரிவித்திருந்தனர். இதனிடையே குடியிருப்பு பிரதேசங்களில் வாழும் மக்கள் தம்மை வெளியேற்றுவது ஹமாஷ் அமைப்பிற்கு வெற்றியாக அமையலாம் எனவும் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கந்தப்பொல கலவரத்தை கண்டித்து இன்று மலையகத்தில் ஹர்த்தால்!

கடந்த வாரம் கந்தப்பொலவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றை அடுத்து இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து இன்று மலையகம் எங்கும் அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

மலையக தொழிற்சங்கங்கள் அனைத்தும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

மலையகத்தில் தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமையைக் கண்டித்தும் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியுமே இந்த வேலைநிறுத்தம் இடம்பெறவுள்ளது.

இதேவேளை இன்று வன்முறைகள் எதுவும் ஏற்படாத வகையில் படைத்தரப்பினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (01)

# உழவு இயந்திர விபத்தில் இராணுவச் சிப்பாய் பலி!

## அனுநாரதபுரம் பகுதியில் சம்பவம்

(அநுராதபுரம்)

அநுராதபுர மாவட்டத்தில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் காயமடைந்தார்.

அநுராதபுரத்திலிருந்து 25 கிலோமீற்றர் தென்மேற்கே நொச்சியாகம பிரதேசத்திலுள்ள ஹெலம்பவவெவ என்ற இடத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது - நேற்றுமுன்தினம் பி.ப 12.50 மணியளவில் உழவு இயந்திரம் ஒன்றில் படையினர் சென்றுகொண்டிருந்த வேளை சாரதி கட்டுப்பாட்டை இழந்ததால், உழவு இயந்திரம் வீதியை விட்டு விலகி கால்வாய் ஒன்றில் விழுந்தது.

இந்தச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். காயமுற்ற மற்றொரு சிப்பாய் நொச்சியாகம வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து அநுராதபுர வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

# இ.தொ.கா. தூதுக்குழுவினர் ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சு!

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தூதுக்குழுவினர் நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பின்போது கந்தப்பொலவில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக இளைப்பாறிய நீதிபதி ஒருவரின் தலைமையில் விசாரணை நடத்தப்படவேண்டுமென்ற தொழிலாளர் காங்கிரஸாரின் கோரிக்கையை ஜனாதிபதி சந்திரிகா ஏற்றுக்கொண்டதாக தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை - அரசாங்கத்தில் இணைவது குறித்தும் ஜனாதிபதி சந்திரிகாவுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தரப்பினர் பேசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சிகிரியாவில் குளவிகள் படையெடுப்பு 300 பேர் வரை வைத்தியசாலையில்

## சுற்றுலா செல்வதற்கு தடைவிதிப்பு

சுற்றுலாத் தலமான சிகிரியாவில் குளவிகளின் அட்டகாசத்தால் அந்தப் பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக சிகிரியாக் குன்றுப் பகுதிக்குச் சென்ற சுற்றுலாப்பயணிகள் குளவிகளால் கொட்டப்பட்டதை அடுத்து இந்தத் தடைவிதிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மட்டும் குளவிகள் கொட்டியதில் பாதிக்கப்பட்ட 200 இற்கும் மேற்பட்டவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு கொட்டிய குளவிகள் நச்சுத்தன்மை வாய்ந்தவை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை நேற்றுப் பிற்பகலிலும் சிகிரியாவுக்குச் சென்ற சுற்றுலாப் பயணிகளை திரண்டுவந்த குளவிகள் கொட்டின. சுமார் 75 பேர் குளவிகளால் தாக்கப்பட்டு சிகிரியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சுற்றுலாவுக்குச் சென்ற இவர்கள் குளவிக்கூட்டுக்கு கல்லெறிந்ததை அடுத்தே குளவிகள் அந்தப் பகுதிக்குச் செல்வோரை தாக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வெடிவிபத்திலேயே போராளி வீரச்சாவு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்டுகள்சேனை என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வெடிவிபத்தில் ஜெயந்தன் படையணியைச் சேர்ந்த நேசராஜ் என்ற போராளி வீரச்சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து முன்னர் வெளியான தகவல்கள் - கிளைமோர் தாக்குதல் என்று கூறியிருந்தன.

எனினும் தற்போது - இது வெடிவிபத்து என்று உறுதிசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கவிஞர் வீராவின் கவிதை நூல், ஒலிக்கவிதை நேற்று வெளியிடப்பட்டது!

வீராவின் 'முதன் முதலாய்' ஒலிக் கவிதை மற்றும் கவிதை நூல் வெளியீட்டு விழா, நேற்று மாலை 4.30 மணியளவில் நிதர்சன நிறுவனப் பொறுப்பாளர் சேரலாதன் தலைமையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் அரசனின் தந்தையாரும், சட்டத்தரணி சிறிகாந்தாவும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் கயல்விழி ஏற்றிவைத்தார்.

நூலுக்கான வெளியீட்டுரையை கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார். சிறப்புரையினை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் பாலகுமாரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஒலிக்கவிதை மற்றும் கவிதை நூல் ஆகியவற்றை வெளியிட்டு வைக்க பேராசிரியர் என்.சண்முகலிங்கம் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா, கவிஞர் சோ.பத்மநாதன் மற்றும் கல்விமான்கள், நலன்விரும்பிகள், போராளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியிடமிருந்து முதற்பிரதியைப் பெறுகிறார் பேராசிரியர் என்.சண்முகலிங்கன்.

## வெசாக் பண்டிகை தினத்தை முன்னிட்டு

# தலைநகர் கொழும்பில் விசேட பாதுகாப்பு ஏற்பாடு

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத்

(கொழும்பு)

கொழும்பு நகரில் வெசாக் பண்டிகைக் காலத்தில் நடைபெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

வெசாக் என்பது ஒரு மகிழ்வான பண்டிகையாகும். பல குடும்பங்கள் ஒன்றிணைந்து வெசாக் கூடுகளை கண்டு மகிழும் ஒரு இனிய நாளாகும்.

எனவே இவ்வாறு சந்தோசமாக இருக்கும் மக்களுக்கு தொல்லைகளை ஏற்படுத்துபவர்களிடமிருந்து நாம் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

எனவே, வெசாக் பண்டிகை முடிவடையும்வரை, படையினர் 24 மணி நேரமும் தமது கடமையில் இருப்பர்.

படையினரும், பொலிஸாரும் வெளிமாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு அழைக்கப்படவுள்ளனர்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு சகல பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. வன்செயல்களோ அல்லது குற்றச் செயல்களோ இடம்பெறமாட்டாதென நாம் நம்புகிறோம்.

இந்த வெசாக் பண்டிகை வாரத்தில் விசேட போக்குவரத்து நடைமுறைகளும் பின்பற்றப்படவுள்ளன என பிரதிப் பொலிஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்தார்.

# பிரதி சபாநாயகர் பதவிக்கு ஐ.தே.கட்சி போட்டியிடுமாம்!

## முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன்

(கொழும்பு)

பிரதி சபாநாயகர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடவிருப்பதாக கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

தொலைக்காட்சி ஒன்றிக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

அரசாங்கம் சிறுபான்மைப் பலம் கொண்டதாக இருக்கிறது. எனினும் எமது கட்சி பிரதி சபாநாயகர் பதவியை விட்டுக்கொடுக்காது. அப்போதுதான் நாடாளுமன்றத்தை சம்பிரதாய ரீதியில் செயற்படுத்த முடியும்.

பிரதி சபாநாயகர் பதவி எமக்குத்தான் கிடைக்கும். இதைவிட சபை முதல்வர், குழுக்களின் தலைவர் போன்ற பொறுப்புக்களைக் கைப்பற்றுவதிலும் எமது கட்சி ஆர்வமாக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# நாத்தாண்டியாவில் கைக்குண்டு வீச்சு; 44 பேருக்கு காயம்!

(கொழும்பு)

நாத்தாண்டியாவிலுள்ள துங்காம என்ற இடத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 4 பெண்கள் உட்பட 44 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. தமிழ் - சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு இடம்பெற்ற உற்சவத்திலேயே இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படாத போதிலும், உறவினர்களுக்கிடையிலான மனக்குரோதமே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## வட - கிழக்கு...

யான அடிப்படை அம்சங்கள் மற்றும் செயற்பாடுகள் உட்பட பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பாக அந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் முழுமையான பங்களிப்போடு வடக்கு - கிழக்கு அபிவிருத்திப் பணிகளை தாமதம் இன்றி ஆரம்பிப்பதற்குத் தேவையான வழிமுறைகளின் அவசியம் பற்றி ஆராயப்பட்டது.

நேற்றைய சந்திப்பின்போது சமரச முன்னெடுப்புக்கள் மற்றும் வடக்கு - கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல் ஆகியவற்றுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து ஜனாதிபதி விளக்கினார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அமைச்சின் செயலாளர் ஆகியோரும் நேற்றய சந்திப்பில் கலந்துகொண்டனர்.

நோர்வே தூதுக்குழுவின் வெளிவிவகார அமைச்சருடன், நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர் மற்றும் நோர்வே வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

நேற்றைய சந்திப்பில் சுமுகமானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

நோர்வே தூதுக்குழு இன்று வன்னி சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்திய பின்னர் அவர்களின் கருத்துக்களை மீண்டும் கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதிக்கு எடுத்துரைப்பார்கள் என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரியாலை....

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

## கொலின்...

அரசாங்கத்தின் அமைச்சர்கள் வருடம் ஒன்றுக்கு நான்கு முன்னணி வெளிநாட்டு விஜயங்களையே மேற்கொள்ள முடியும் என ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தபோதும் லக்ஷ்மன் கதிர்காமரின் இரண்டாவது வெளிநாட்டு விஜயம் இதுவாகும்.

## நோர்வே....

தெரிவித்தார்.

இந்நிலையில், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் இன்று காலை இந்தோனேஷியாவுக்குச் செல்லவிருக்கிறார்.

தொடர்ந்தும் கொழும்பில் தங்கியிருக்கும் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை வன்னியில் சந்தித்து ஜனாதிபதியின் சமாதான ஏற்பாடுகள் குறித்த தகவல்களைத் தெரிவிக்கவுள்ளார். (01)

## இனந்தெரியாதோரின்...

பிரேத பரிசோதனைக்கும் உத்தரவிட்டார். பிரேத பரிசோதனைக்காக சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

## நெடுந்தீவு....

பொலிஸ் நிலையம் கூட்டிச்சென்று விசாரணைகளை மேற்கொண்ட பின் விடுவித்தனர்.

இதேவேளை கண்காணிப்பாளர்களை ஏற்றிவந்த கடற்படை ரோந்துப் படகும் கடலில் வீழ்ந்தவரைத் தேடியது.

அத்துடன் நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரின் அனுசரணையுடன் மீன்பிடிப் படகுகள் மூலம் நேற்றுமாலை வரை தேடியும் கடலில் வீழ்ந்தவரை மீட்கமுடியவில்லை.

இன்றும் கடலில் வீழ்ந்தவரை தேடும் பணிகள் இடம்பெறவுள்ளது.

நெடுந்தீவை சுற்றிப்பார்க்கும் நோக்குடன் இன்னொரு இளைஞருடன் நெடுந்தீவுக்கு வந்து திரும்பும் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (113)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.